# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 362 கார்த்திகை 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 26 நவம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## சர்வாதிகாரி என்பது பொய்ப் பரப்புரை

### அவ்வாறு அடையாளப்படுத்த வேண்டாம் என்கின்றார் அரச தலைவர் கோத்தபாய



கொழும்பு, நவம்பர் 26

நான் இலங்கையின் சட்டத்தை மதிக்கும் நபர். என்னை இனவாதியாக சர்வாதிகாரியாக அடையாளப்படுத்துவது முற்றிலும் தவறானது. அவ்வாறு எவரும் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு கூறியுள்ளார் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச. 23

## கடல் அலை தூக்கி வீசி மன்னாரில் மீனவர் சாவு

மன்னார், நவ.26

மன்னார், தென்கடலில் படகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கடல் அலை தூக்கி எறிந்து கடலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மன்னார், தாழ்வுபாடு, வளனார் வீதியைச் சேர்ந்த சத்தியோகு பெப்சிக்கர் பீரிஸ் (வயது-23) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 23

## குளத்தில் மூழ்கி இளைஞர்கள் மூவர் நேற்று பரிதாபச் சாவு

மட்டக்களப்பு, நவ.26

மட்டக்களப்பு, ஆரையம்பதி திருநீற்றுக்கேணிக் குளத்தில் மூழ்கி 3 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் நடந்துள்ளது.

ஆரையம்பதி, முதலாம்பிரிவு, திருநீற்றுக்கேணிப் பகுதியைச் சேர்ந்த சு.தர்சன் (வயது-20), ஆரையம்பதி 2ஆம் பிரிவு செல்வநகரைச் 23

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.26

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

வவுனியா, கனகராயன் குளத்தைச் சேர்ந்த தங்கவேலு கபேஸ்வரன் (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 22ஆம் திகதி யாழ்ப்பாணம் அரியாலையில் உள்ள தனது தங்கையின் வீட்டுக்கு வந்திருந்த சமயம், அன்று மாலை 6 மணியளவில் அரியாலை விளையாட்டு அரங்குக்கு அண்மையில் விபத்தில் சிக்கினார்.

உந்துருளியில் தனது மருமகனுடன் பயணித்த அவர் ஈருருளி ஒன்றுடன் விபத்துக்குள்ளானார். மருமகன் தூக்கி வீசப்பட்டதுடன், இவர் அங்குள்ள மரத்துடன் மோதிப் படுகாயமடைந் 06

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு கொடுத்த விதம் தவறு

### இந்தியா பக்கம் சாய்கிறார் கோத்தபாய்

கொழும்பு, நவ.26

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்தது பெரிய தவறு. அந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மீண்டும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது 23

## பேருந்து - டிப்பர் விபத்தில் மாங்குளத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.26

மாங்குளத்தில் ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை பயணிகள் சொகுசுப் பேருந்தும், டிப்பர் வாகனமும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று அதிகாலை 2.15 மணியளவில் விபத்து நடந்துள்ளது. கொழும்பில் இருந்து 23

## 13 அம்சக் கோரிக்கைகளை ஏற்றதால் ஐ.தே.கவில் பிளவு

### ரோஹித்த எம்.பி. கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 13 அம்சக் கோரிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்ததால்தான் அந்தக் கட்சிக்குள் தற்போது பிளவு ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்திரமுல்லை, நெலும்மாவத்தையில் 04

## உதயன் அலுவலகத்தில் நாளை குருதித் தானம்

யாழ்ப்பாணம், நவ. 26

உதயன் பத்திரிகை அலுவலகக் கேட்போர் கூடத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குருதித் தானம் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் வந்து குருதித்தானம் செய்யமுடியும்.

உதயன் வெளிவரத் தொடங்கி 34 ஆண் 06

## மலையக மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் அதாவுல்லா

### சர்வணபவன் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ.26

இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் தேயிலை உற்பத்திக்காகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தி உழைக்கும் மலையக மக்களைக் கேவலப்படுத்தும் வகையிலான வார்த்தைகளை முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பயன்படுத்தியுள்ளார். இது அருவருக்கத்தது. கண்டிக்கத்தக்கது. அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 06

## தலைமையில் இருந்து விலக ரணில் விக்கிரமசிங்க முடிவு

கொழும்பு, நவ.26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் நீடிப்பது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க ஓரிரு தினங்களில் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பார் என்று 05

## மாவீரர் நாளை நினைவேந்த இடையூறுகள் ஏதும் இல்லை

### வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிப்பு

கிளிநொச்சி,நவ.26

மாவீரர் நாளை நினைவு கூருவதற்கு இதுவரை எவ்வித அச்சுறுத்தல்களும் இருக்கவில்லை என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சு.பசுபதி 23

## வாக்களிக்கவில்லை என்பதற்காக வன்முறையை கட்டவிழ்க்கக் கூடாது

### ஞானசாரர் கூறுகின்றார்

கொழும்பு, நவ.25

தற்போதைய ஆட்சியாளர்களுக்குச் சிறுபான்மை மக்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காகச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்க்க எவரும் முயற்சிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

கொழும்பில் நேற்று நடத்திய செய் 06

## பிரிட்டன் பொதுத் தேர்தலில் தமிழர் விவகாரம் செல்வாக்கு

கொழும்பு, நவ.26

பிரிட்டனில் அடுத்த மாதம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் அங்குள்ள பழமைவாதக் கட்சி நேற்று வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் இலங்கையில் இரு தேசக் கோட்பாட்டுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.


இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க ஒரு பன்னாட்டுப் பொறிமுறையை உருவாக்கத் தமது ஆதரவை அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

சைப்பிரஸ் மற்றும் பலஸ்தீனத்துடன் ஒப்பிட்டு இலங்கையில் இரு தேசக் கோட்பாடு வலியுறுத்தப் 23

# பல்வேறு பிரச்சினைகளை எளிதில் தீர்க்க வேண்டுமா?

பரிகாரம் என்றால் எமக்குள்ள பிரச்சினைகள், கஷ்ட நஷ்டங்கள், தடைகள், இடையூறுகளை அகற்றி நல்வழிகாட்டுமாறு கடவுளிடம் பிரார்த்தனை, நேர்த்திக்கடன் இப்படி பல விடயங்களை வேண்டிக்கொள்வதாகும். அந்தவகையில் எமக்கு வருகின்ற பல்வேறு பிரச்னைகளை தீர்க்க கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிகாரங்கள் சிலவற்றை பின்பற்றினாலே போதும். அந்த பரிகாரங்கள் என்னென்ன என்பதை பார்ப்போம்.

- செம்பு மற்றும் வெள்ளி அதிகம் உடலில் படும் படி செய்து வரவும். இரண்டும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. செம்பு மோதிரம் அல்லது கை வளையம் மற்றும் இடது கை ஆட்காட்டி விரலில் வெள்ளி மோதிரம் (கற்கள் எதுவும் இல்லாத சாதாரணமான ஒன்று) அணிவது தான் அகர்ஷ்னா முறைகளில் ஒன்று. வலது கை சுண்டு விரலில் செம்பு மோதிரம் அணிய வும்
- சுத்தமான மலை தேன் மற்றும் குங்குமம் எப்போதும் சுவாமி அறையில் இருக்குமாறு பார்த்து கொள்ளவும்.
- வியாபாரிகள் சுத்த தேன் நிறைந்த பாட்டில் தங்கள் மேசையில் மற்றும் பணம் வைக்கும் இடத்தில் வைத்து வரலாம்.
- வடகிழக்கு மூலையில் துளசி செடி வைத்து தினமும் அதை சுத்தமாகப் பராமரித்து வரலாம். மேலும் வியாழன் அன்று மட்டும் அதற்குச் சுத்தமான பாலை வார்த்து வரவும்.
- மேற்கு பார்த்த வீடு கடை உள்ளவர்கள் வாயிலில் மஞ்சள் துணி கட்டி வைக்கலாம். மற்ற திசை உள்ளோர்கள் சிகப்பு துணி அல்லது ரிப்பன் கட்டலாம்.
- குளிக்கையில் தினசரி வில்வ இலையை போட்டு குளித்து வரலாம். வில்வ இலையைக் கொதிக்க வைத்து குளிக்கும் நீரில் கலந்து குளிக்க நலம் மிகும்.
- ஏழை எளியோர், தானம் கேட்போர் ஆகியோருக்கு மஞ்சள் லட்டு மற்றும் மஞ்சள் வாழை வாங்கி கொடுக்கவும்.
- தினசரி முடிந்தாலும் செய்யலாம். காளை மாட்டுக்கு வெல்லம் கொடுத்து வரலாம்.



# மகத்துவம் நிறைந்த வியாழக்கிழமை விரதம்



வாரத்தில் வரும் ஏழு நாள்களில் வியாழக்கிழமை பிரகஸ்பதி எனப்படும் குரு பகவான் வழிபாட்டுக்குரிய தினமாக இருக்கிறது. எந்த ஒரு மாதத்திலும் சுக்ல பட்சம் எனப்படும் வளர்பிறையில் வரும் வியாழக்கிழமைகளில் இந்த வியாழக்கிழமை விரதத்தை மேற்கொள்ளலாம். ஒரு வருடத்தில் தொடர்ந்து 16 வளர்பிறை வியாழக்கிழமைகளில் இந்த வியாழ விரதம் மேற்கொள்வது மிகுந்த நன்மைகளை தரும். 3 ஆண்டு காலம் இந்த விரதத்தை சரியான படி அனுஷ்டிப்பவர்களுக்கு குரு பகவானின் பூரண அருள் வாழ்நாள் முழுவதும் கிடைக்கும்.

பிரகஸ்பதி எனும் குரு பகவானை குறித்து மேற்கொள்ளப்படும் இந்த வியாழக்கிழமை விரத தினத்தன்று அதிகாலையிலே எழுந்து தலைக்கு ஊற்றி குளித்து முடித்து விட வேண்டும். பிறகு மஞ்சள் நிற ஆடைகளை அணிந்து கொண்டு, எதுவும் உண்ணாமல், அருந்தாமல் அருகிலுள்ள கோயிலின் நவகிரக சந்நிதிக்கு சென்று குரு பகவானுக்கு மஞ்சள் நிற பூக்கள் சாற்றி, மஞ்சள் நிற இனிப்புகள் நைவேத்தியம் செய்து, சந்தனம், மஞ்சள் போன்றவற்றை கொண்டு குரு பகவானுக்கு அபிஷேகம் செய்விக்க வேண்டும். பின்பு குங்குமப்பூ கலந்த பசும்பாலை கொண்டு குரு பகவானுக்கு அபிஷேகம் செய்து வழிபட வேண்டும்.


விரதம் இருக்கும் நாள் முழுவதும் உணவேதும் அருந்தாமல் இருப்பது விரதத்தின் முழுமையன பலன்களை தரும். அன்றைய தினம் குரு பகவானுக்குரிய மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள் போன்றவற்றை படிப்பது நல்லது.

மாலையில் மஞ்சள் நிற இனிப்புகள், ஆடைகள் போன்றவற்றை வறிய நிலையில் இருப்பவர்களுக்கு தானமளிப்பது நல்லது. இரவில் உப்பு சேர்க்காத உணவை சமைத்து சாப்பிட்டு வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்யலாம்.

# கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் குணநலன்கள், ஜோதிடப் பலன்கள்!

புதனுக்கு உரிய நட்சத்திரங்களில் இரண்டாவது நட்சத்திரம் கேட்டை. 'கேட்டையில் பிறந்தவர்கள் கோட்டை கட்டி ஆள்வார்கள்' என்று ஒரு பழமொழியே உண்டு. கோட்டை கட்டி ஆள்கிறீர்களோ இல்லையோ, கோட்டையில் இருந்து ஆட்சி செய்பவர்களின் நட்பைப் பெற்றிருப்பீர்கள். மனதைரியம் மிக்கவர்களாக இருப்பீர்கள். இயல்பிலேயே நல்ல குணங்களைப் பெற்றிருப்பீர்கள். ஆனாலும், அடிக்கடி முன்கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டி விட்டு பிறகு அதற்காக வருத்தப்படச் செய்வீர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன் நிற்பீர்கள். எப்போதும் முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்கள் ஒரு சிலரே இருப்பார்கள். செல்வம் சேர்ப்பதில் துடிப்புடன் செயல்படுவீர்கள். அதேவேளை சில நேரங்களில், 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்பதற்கேற்ப கிடைத்த அளவில் மனத் திருப்தி அடைந்துவிடுவீர்கள். அடிக்கடி மற்றவர்களிடம் உங்களைப் பற்றிப் பெருமை பேசுவீர்கள். அடிக்கடி எதையாவது கொறித்துக்கொண்டே இருப்பீர்கள். சில நேரங்களில் விரக்தியுடன் காணப்படுவீர்கள். மற்றவர்களிடம் கைகட்டி வேலை செய்யாமல் சுயமாகத் தொழில் செய்து பணம் ஈட்டுவீர்கள்.

உறவினர்களால் ஏமாற்றத்துக்குள்ளாகி வருத்தப்படுவீர்கள். மற்றவர்கள் செய்த உதவியை கடைசி வரை மறக்க மாட்டீர்கள். சுயமாகச் சிந்தித்துச் செயல்படுபவர்களாக இருப்பீர்கள். நிறைய புத்தகங் களை வாசிக்கும் பழக்கம் உடையவர்களாக இருப்பீர்கள். அமைதி விரும்பியாக இருப்பீர்கள். எப்போதும் சமாதானத்தையே விரும்பும் நீங்கள், சண்டை நடக்கும் இடத்திலிருந்து உடனே விலகிவிடுவீர்கள். மற்றவர்களின் மனப்பாங்கை அறிந்து பேசுவதில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான். உங்களிடம் இருப்பதை யாரேனும் கேட்டால் சற்றும் தயங்காமல் உடனே கொடுத்துவிடுவீர்கள். பேச்சாற்றல் மிக்கவர்களாக இருப்பீர்கள். குடும்பத்தினரிடன் பாசத்துடன் இருப்பதைப் போலவே 'கண்டிப்புடனும் நடந்து கொள்வீர்கள். தெய்வ பக்தி மிக்கவர்களாக இருப்பீர்கள்.



எப்போதும் சந்தோஷமாக இருப்பதுடன் மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று விரும்புவீர்கள். பிரச்னைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவீர்கள்.

உழைப்பதற்குச் சளைக்க மாட்டீர்கள். மற்றவர்களுக்காகப் பாடுபடுவீர்கள்.

உணவு விடயத்தில் அவ்வளவாக கவனம் செலுத்த மாட்டீர்கள். உங்கள் அணுகுமுறை மற்றவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றுத் தரும். ஆன்மிகத்தில் மிகுந்த ஈடுபாடு இருக்கும். அடிக்கடி கோயில்களுக்குச் சென்று வழிபடுவீர்கள். நண்பர்களுக்கு ஒரு பிரச்னை என்றால் முன் நின்று தீர்த்து வைப்பீர்கள். கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். மற்றவர்களுக்கு கொடுத்த வாக்கை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பீர்கள். மற்றவர்கள் மதிக்கும்படியான வாழ்க்கை அமைவதற்காக பெரும் முயற்சி எடுத்து சாதிக்கவும் செய்வீர்கள்.



# ஓட்டை பானையும் ஒளிரும் பூக்களும்

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டுபானைகளைவைத்திருந் தான். அந்தப்பானைகளை ஒருநீளமான கழியின் இரண்டுமுனைகளிலும்தொங்க விட்டு, கழியைத் தோளில் சுமந்து செல் வான். இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ் வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது, குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும். குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றி பெருமை. குறையுள்ள பானையைப்பார்த்துஎப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும். இப்படியே இரண்டு வருடங்கள்கழிந்துவிட்டன. கேலிபொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டது.

"ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். உங் களுக்கும்தினமும்என் குறையால், வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி, உங்கள் வேலைப்பளுமிகவும்அதிகரிக்கிறது. என் குறையை நீங்கள் தயவு கூர்ந்து சரி செய் யுங்கள்" அதற்கு விவசாயி,

"பானையே! நீ ஒன்று கவனித்தாயா? நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவ னித்தாயா? உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால்தான் வழிநெடுக பூச்செடி விதை களை விதைத்து வைத்தேன்.

அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தின மும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்க ரிக்கிறேன்.

மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பா திக்கிறேன்" இதைக் கேட்ட பானை கேவல மாக உணர்வதை நிறுத்தி விட்டது. அடுத் தவர் பேச்சைப் பற்றிக் கவலைப் படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது அடுத்தவர் பேச்சைப் பற் றிக் கவலைப் பட்டால், நாம் எந்த வேலை யையும் செய்ய முடியாது!






1. தந்தைக்கு முன்பு குரலை உயர்த்தாதீர்..! அவ்வாறு செய்தால் இறைவன் உங்களைத் தாழ்த்தி விடுவான்.
2. தந்தையின் கண்டிப்பை பொறுத்து கொள்ளுங்கள்..! அதனால் உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.
3. தந்தைக்குமரியாதைசெய்யுங்கள்..!அதனால்உங்கள்பிள்ளை கள் உங்களுக்கு மரியாதை செய்வர்.
4. தந்தைசொல்வதைகவனமாககேளுங்கள்..!ஏனென்றால் பிறர் எமக்கு ஏதும் சொல்லும் நிலமை வரக் கூடாது..?
5. தந்தைக்கு முன்பு பார்வையை தாழ்த்தி கொள்ளுங்கள்..! அத னால் இறைவன் மக்கள் பார்வைக்கு முன்பு உயர்ந்த கண்ணி யம் அளிப்பான்..!
6. தந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் எமக்கு தெளிவான ஒரு புத்தகம் ஆகும்..! அந்த ஒவ்வொரு பக்கத்தைக் கொண்டு பயன் அடைந்து கொள்ளுங்கள்..!

## வாக்களிக்கவில்லை...

தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த ஊடக சந்திப்பில் வட மேல் மாகாண ஆளுநர் மொகமட் முசமிலும் கலந்து கொண்டார்.

ஞானசார தேரர் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது

தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவை எவ்வாறு பெறுவது என்பதைப் பற்றிச் சிந்தித்து அவர்களுடன் பயணிக்க வேண்டும். வடமேல் மாகாண ஆளுநர் மொகமட் முசமி லுக்கு எதிராகச் சிங்கள பௌத்த மக்களைத் தூண்டிவிடும் முயற்சிகள் எதையும் நாங்கள் செய்யவில்லை.

எம்மைக் குறிப்பிட்டு எவரும் பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கக் கூடாது - என்றார்.

வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள மொக மட் முசமிலுக்கு எதிராகச் சிங்கள மக்கள், தேரர்கள் சில ருடன் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள் ளனர் என்றும், அதற்குப் பொதுபல சேனா அமைப்புத் தலைமை தாக்குகின்றது என்றும் தகவல்கள் வெளியாகி யிருந்த நிலையிலேயே கலகொட அத்தே ஞானசார தேரர் இந்த ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். (எ)

## விபத்தில்...

தார். அவர் அன்றிரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னையில் சேர்க்கப்பட்டார். அவருக்குத் தொடர் சிகிச்சை வழங் கப்பட்டிருந்த நிலையில் நேற்று மதியம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரைணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## உதயன்...

டுகளை நிறைவுசெய்து நாளை 35ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றான். உதயன் கடந்த 5 வருடங் களுக்கும் மேலாக தனது அலுவலகத்தில் குருதித் தானத்தை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றான் என்பது யாவரும் அறிந்ததே. (த)

## மலையக...

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வலியுறுத்தி யுள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இந்த நாட்டின் சிறுபான்மை இனமான முஸ்லிம் இனத் தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி, நாட்டின் மற்றொரு நசுக்கப்படும் சிறுபான்மை இனத்தை நோக்கித் தரக்கு றைவான வார்த்தைகளைப் பிரயோகிப்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்த முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தன் இனத்தின் சுயகௌர வத்துக்குப் பங்கம் வந்தபோது தன் சமூகத்தை மிகவும் கேவலமான சொற்களால் பேசிய அதாவுல்லா மீது தண் ணீர் ஊற்றி, தன் தார்மீகக் கோபத்தை வெளிப்படுத்தி யிருந்தார்.

பேரினவாதத்தால் சிறுபான்மை இனங்கள் நசுக்கப்படும் ஒரு சூழலில், அதுவும் தனிப் பேரினவாத வாக்குகளால் அரச தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலை யில் சிறுபான்மை யினரின் பாதுகாப்புத் தொடர்பான அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்தநிலமையில் மற்றொரு சிறு பான்மையினத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவர் வெளிப்படுத்தியுள்ள கேவலமான வார்த்தைகள் தொடர்ந் தும் நாங்கள் நசுங்கி இருக்கத்தான் போகின்றோம் என்ற அச்சத்தையே ஏற்படுத்துகின்றது.

சிறுபான்மை மக்களிடம் பேரினவாதம் தொடர்பாக உள்ள அச்சத்தைக் களையச் சிறுபான்மை இனத்தவர்கள் ஐக்கி யப்பட வேண்டிய வேளையில், ஒரு சிறுபான்மை இனம் மீது, இன்னொரு சிறுபான்மையினம் குரோதம் கொள்வதும், அவர்களைத் தரக் குறைவாக எண்ணுவதும் தவறானதா கும்.


அதாவுல்லா பேசிய அந்தத் தரக்குறைவான வார்த்தைகளை எந்தவொரு முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இது ஒரு தனிப்பட்ட வக்கிர அரசியல்வாதியின் வார்த்தை களே தவிர முஸ்லிம் சமூகத்தின் வார்த்தைகள் அல்ல. ஏனெனில் இஸ்லாமிய மார்க்கம் சக மனிதர்களை இவ்வாறு தரக்குறைவாகப் பேச ஒருபோதும் அனுமதித்ததில்லை. மலையக மக்களை இழிவுபடுத்தும் வகையில் வார்த்தை களைப் பிரயோகித்த அதாவுல்லாவை வன்மையாகக் கண் டிக்கும் அதேவேளை, முன்னாள் அமைச்சர் அதாவுல்லா மலையக மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று அனைத்துச் சிறுபான்மையின மக்கள் சார்பாகவும் வலியுறுத்துகின்றேன் - என்றுள்ளது. (எ)

## இதய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **கேமலோஜினி பிறேம்நாத்**
அவர்களின் தந்தையார்
**லயன். தம்பிப்பிள்ளை தேவராஜன்**
அவர்கள் 16.11.2019 இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**பாடசாலை சமூகம்**
**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**
(c.111785) (13.17)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 . 01 . 1942



மறைவு 17 . 11 . 2017

**அமரர் டாக்டர் தம்பு துரைராசா (D.A.M)**
(ஆயுர்வேத வைத்தியர், உரிமையாளர்- மாதுஜன் வைத்தியசாலை மருதடி, யாழ் வீதி, வல்வெட்டித்துறை, வைத்தியரத்ன பண்டித், கீர்த்தி ஸ்ரீ தேசபந்து - வைத்திய அபிமானி)

கண்ணில் கனவில் நினைவால் நிரம்பி
மண்ணில் மலராய் மாண்பாய். மலர்ந்து
எண்ணம் எல்லாம் எமக்காய் வாழ்ந்த
கண்ணின் ஒளியே என்றினிக் காண்போம்.

'பாமாலயம்'
கவிஞர் செல்லையா வீதி.
அல்வாய்.
குடும்பத்தினர்

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
### VACANCY

*Applications are hereby invited from qualified persons to teach:*

- Science (English Medium)-Grade 6-11
- Biology (English Medium) - A/L
- Special Education
- English - Grade 6-A/L
- Drama & Theatre - A/L
- Logic & Scientific Method - A/L
- ICT - Grade 6- A/L

Please send your complete CV including the contact deatails of two non-related referees on or before 6th December 2019 to the address below:
**The Principal,**
**St.John's College, Jaffna.**
CR32836(16/17)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**சி.றோகினி**
**(றொக்சி)**

தோற்றம்
17.11.1982

மறைவு
26.11.2013



என் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்த்தம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே!
நீர் தந்த அன்பின் நிழல் வாழும் உன்......

No.32, பற்றிஸ் றோட்,
குருநகர், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

கணவர்
மகள்:- பிரியதர்சினி
(யாழினி)
பிரியங்கா (திவ்வியா)

## 13 அம்சக்...

அமை ந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 13 அம்சக் கோரிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியி ஆதரவளித்தால் இப்போது கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி அரசால் முன்னெடுக்கப்பட்ட மோசடிகளுடன் தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பாக உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுச் சட்டத்தை நிலைநாட்ட நட வடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (எ)

## வேலையாள் தேவை

கண்ணாடி வெட்டுபவர்கள்
வேலைக்கு தேவை.
**தொடர்புக்கு:- 076 665 5166**
(110036C(16/17))

## வாடகைக்கு / விற்பனைக்கு

லக்கி கப் யூஸ் நிறுவனம் சகல இயந்திரங்களுடனும் வாடகைக்கு / விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 076 657 9904, 076 648 3896

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.
**தொடர்புக்கு:- 077 3322 326**
rajinthan87@gmail.com

## பெயர் மாற்றம்

8 ஆம் வட்டாரம் புங்குடுதீவு
என்னுமிடத்தில் வசிக்கும்
**கெயந்தினி** ஆகிய நான் இன்று
முதல் எனது பெயரை **கஜந்தினி**
என மாற்றிக் கொள்கின்றேன் என
அறியத்தருகின்றேன்.
**கேதீஸ்வரன் கஜந்தினி.**
(CS 29533) (14.17)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்-2020

பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள் இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2020 முதல் 31.12.2020 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.
கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 26.11.2019 முதல் 10.12.2019 பிற்பகல் 2.00 மணி வரையான அலுவலக நேரம்.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 10.12.2019 பிற்பகல் 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 10.12.2019 பிற்பகல் 2.00 மணி.

**நிபந்தனைகள்**

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை/ செல்லுபடியான கடவுச்சிட்டு/ செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 10.12.2019 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
4. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும் எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரமுண்டு.
5. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்
6. கேள்விப்பத்திரங்களை கீழ்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கெள்ளல் வேண்டும்.
7. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தெகை 300,000.00 ரூபாவுக்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் 1/2 பகுதியையும், 300,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கெள்ளலாம்.
9. மாட்டு இறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அமைக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.

**குத்தகைக் கேள்வி அட்டவணை – 2020**

| இல | குத்தகை விபரம் | ஏற்றக்கெள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தெகை | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புத்தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 1,596,000.00 | 30,000.00 | 2000.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 666,600.00 | 15,000.00 | 2000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 56,000.00 | 5000.00 | 2000.00 |

சுப்பிரமணியம் சுரேன்
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி, பிரதேசசபை,
பளை.

திகதி :- 26.11.2019

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 09 1942



இறப்பு 24 09 2019

## இராசையா தவராசா

யாழ். நயினா தீவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா தவராசா அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (24.11.2019) கொழும்பில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற இராசையா காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் விமலசோதி அவர்களின் அன்பு கணவரும் தனேஸ்வரி, அருந்ததி தேவி, காலஞ்சென்ற துளசிதாசன், தர்மராணி, தேவராணி, தேவமிர்ததேவி, ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற கணேசமூர்த்தி, தியாகராஜா அவர்களின் அன்பு மைத்துனரும், அசலை, அமலன், நிமலி.சாமளை ஆகியோரின் அன்பு தந்தையும்,சிவகுமார், கார்த்திகா, ஜங்கரராஜ், டிலக்சன், ஆகியோரின் அன்பு மாமனாரும், சாயிருஜன், அனிருத்தன், இஷிதா, ஸ்ரவன், ஹெமிதீரா, ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை (27.11.2019) முற்பகல் 9.00 மணி முதல், கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியிற்கு தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
0773337404 - ஜங்கரராஜ்
26A, தக்சினராம வீதி,
கல்கிசை

## ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCIES

**1. Administrative Secretary**
**Qualifications and Experience:**

Having passed the G.C.E. O/L Examination in six subjects with three credit passes including English and Tamil with a Secretarial course from a recognized institution or pursuing examination leading to Charted Secretary with 3 years experience

Or

**A Charted Secretary with at least 3 years experience**

**Professional Competencies required:**

High level of proficiency in written and spoken English and ability to handle correspondence independently

Proven ability to write Project proposals

High level of IT literacy especially in the areas of Word, Excel, email and internet

Ability to function effectively in a team environment inspiring trust and cooperation of other team members

Ability to communicate effectively orally in Sinhala would be an added advantage

**Salary: Negotiable**

**2. Management Assistant**
**Qualifications**

- Having passed the G.C.E. O/L Examination in six subjects with three credit passes including English and Tamil

**Professional Competencies required:**

- Good command of English & Computer Skills are essential
- Should be able to prepare and disseminate correspondence, project proposals and memos
- Should be able to maintain an efficient filing system

**Salary: Negotiable**

Please send your CV with contact details of two non-related referees by registered post on or before 6 December 2019 to the address below:

**The Principal, St. John's College, Jaffna** (cs.32837) (13.17)


## தலைமையில்..

அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் இருக்கப் போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைககளைத் தைரியமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க அறிவுரை வழங்கியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது தொடர்பாகஅனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி விரைவில் தீர்மானிக்கப்படும். கட்சியின் தலைமைத்துவத்தில் தொடர்ந்தும் இருப்பதை எதிர்பார்க்கவில்லை என்று ரணில் விக்கிரம சிங்க தெளிவாகக் கூறியுள்ளார். தன்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்று அவர் எமக்கு அறிவுரை வழங்கியுள்ளார். கட்சியாகப் பிளவுபடாது, முரண்பாடுகளை ஏற்படுத்தாத வகையில் எப்போதும் இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார்-என்றார். (எ)


## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(ராசா)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பாலசுப்பிரமணியம் (ராசா) நேற்று **(25.11.2019)** திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் பாக்கியலட்சுமி (கனடா), இராசலட்சுமி, இராசேந்திரம் (NTR Transports), புவனேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, வரதராசா, செல்வராணி, காலஞ்சென்றவர்களான பரமசாமி, சிவலிங்கம் (சிவலிங்கம் மோட்டோஸ்), சோமசுந்தரம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், இராசரெத்தினம், மல்லிகாதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், சாந்தினிதேவி (கனடா), பிரபாவதி (முகாமைத்துவ உதவியாளர்- பிரதேசசபை, ஊர்காவற்றுறை), மனோரஞ்சினிதேவி (முகாமைத்துவ உதவியாளர்- பிரதேச செயலகம், கரச்சி, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார் (கனடா), கண்ணதாசன் (மணிகண்டன் களஞ்சியம்), இரவிச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும், தர்ஷிகன் (சுவிஸ்லாந்து), லக்ஷிகன் (கனடா), தேனுஜா, விதுஷா (கனடா), நிரோஜன் (கனடா), நிதர்ஷா (பேராதனைப் பல்கலைக்கழகம்), துளசிகா, கஜீவன், தாருகா, மகிழினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(26.11.2019)** செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று **12.00** மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

CS29538(16/17)


புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

தகவல்:- குடும்பத்தினர் 077 918 1021



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 09 - 1943



மறைவு 24 - 11 - 2019

### நோபேட் மரியதாஸ்

(முன்னாள் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ,ஜெயந்தி நகர், கிளிநொச்சி)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, ஜெயந்திநகர் மற்றும் திருநாவற்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நோபேட் மரியதாஸ் அவர்கள் 24.11.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நோபேட் தம்பதியினரின் அன்பு மகனும் ராணி மரியதாஸ் அவர்களின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற மேரி புறுனோறஞ்சினியின் அன்புக்கணவரும் பிரான்சிஸ் லெனி (கனடா), கிஷோக்குமார் (மின் இணைப்பாளர்), காலஞ்சென்ற ஆன் அனுசியா மற்றும் யூலியஸ் ஜெயக்குமார் (சாரதி), சஞ்சீவ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மரினா பிரான்சிஸ் லெனி (கனடா), நளினி கிஷோக்குமார் (ஆசிரியர், வவுனியா இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் லெனாட் (கனடா), ஜெராட் (கனடா), சாளினி (கனடா), நிதுசா, நளின்குமார், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 11மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்னர் நல்லடக்கத்திற்காக இறம்பைக்குளம் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந. கிஷோக்குமார் (மகன்) 0777 629171


இல. 182/16, 5ஆம் ஒழுங்கை, கோவில்குளம், வவுனியா



## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தெய்வேந்திரன்

(ஓய்வுநிலைக் கணக்காளர், நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்)



இராதம்பு கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தெய்வேந்திரன் நேற்று (25.11.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் அன்புக்கணவரும் விதூர்சன் (கொமர்ஷல் வங்கி - திருநெல்வேலி), ஹர்சன் (மக்கள் வங்கி - நெல்லியடி), முகுந்தன் (மக்கள் வங்கி - மாங்குளம்), யாழினி ஆகியோரின் அன்புத்தந்தையும் சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் - யாழ்ப்பாணம்), சிந்துஜா (மக்கள் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகேந்திரன் (ஜேர்மனி), புவனேந்திரன் (ஜேர்மனி), புஸ்பராணி (UK), ஜெயராணி (ஜேர்மனி), மோகனராணி (ஜேர்மனி), பேரின்பராண்னி (ஜேர்மனி), நாகநாதன் (ஜேர்மனி), சாந்தராணி (ஜேர்மனி), லோகச்சந்திரன் (UK) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காஞ்சனாதேவி (ஜேர்மனி), வசந்தாதேவி (ஜேர்மனி), யோகநாதன் (UK), விக்னராஜா (ஜேர்மனி), பிரேமராஜா (ஜேர்மனி), ஜெகமலர் (ஜேர்மனி), பத்மகுமார் (ஜேர்மனி), அஞ்சலை (UK), காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் சரவணமுத்து, காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தையல்நாயகி (கனடா), பொன்னம்பலம், சரஸ்வதிதேவி, பத்மாதேவி, புஸ்பதேவி, விஸ்வநாதன் ஆகியோரின் மைத்துனரும் விதுன், யாகவி, தக்ஷ்வின் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2019) புதன்கிழமை பி.ப 1.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று கந்தன்காடு இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அன்னை இல்லம்"
MPCS லேன்
கோப்பாய் வடக்கு, கோப்பாய்

தகவல் : குடும்பத்தினர்.
077 452 8842
077 869 3037

# மரண அறிவித்தல்கள்



மண்ணில் 18 . 08 . 1938

விண்ணில் 25 . 11 . 2019

## திருமதி மரியாம்பிள்ளை மரியசாளற்

யாழ்ப்பாணம் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வவுனியா மதவுவைத்தகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை மரியசாளற் அவர்கள் நேற்று (25.11.2019) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான யாக்கோப்பு மேரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பத்தி நாதர் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் டொமிற்றில்டா கிறிஸ்ரில்டா, இமல்டாவதனி, ஜோர்ஜ் தேவராஜ், பீற்றர் ஞானராஜ் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் தர்மராஜா, கிறிஸ்ரினா, திருமகள் ஆகியோரின் அன்பு மாமியாரும் றொசான், றொபினா, சஜிந்தன் போல்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் மேரி ஜோசப் பிரான்சிஸ்கா, காலஞ்சென்ற சாமிநாதன் ஆகியோரின் சகோதரியும் திரேசம்மா, யோண்பிள்ளை, ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.11.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் மதவுவைத்தகுளம் அன்னாரின் இல்லத்திலிருந்து வவுனியா தூய அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 11மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவுவைத்த குளம், வவுனியா.

(CS 00614)(15.17)

தகவல்: குடும்பத்தினர்.



மண்ணின் மடியில் 08 . 11 . 1928

ஆண்டவன் அடியில் 24 . 11 . 2019

## மனுவேற்பிள்ளை ஞானப்பிரகாசம்

யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளம் மற்றும் பெரிய பண்டிவிரிச்சான வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை ஞானப்பிரகாசம் 24.11.2019 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை றோசமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பேணடேற் அவர்களின் ஆருயிர்க்கணவனும் இமெல்டா, ஆன்கிறேஸ், இம்மானுவேல், யோசவின், யோண்சன், நிக்சுலன், கன்சியா ஆகியோரின் ஆசைமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான யோசவின், அல்பிரட் மற்றும் அருட்சகோதரி ஹெமியூல்ட் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மரியதாஸ், சாம்சன், பிரியா, போல், விஜி, சிந்துஜா, வோல்டரர் ஆகியோரின் அன்பு மாமாவும் Rev. Fr ஜெயசீலன் அவர்களின் மாமாவும் பிரவீன், ஜெக்சன், ஜெருவேல், அன்றியன், கவின், பெனோறா, அவ்லின், ஜெனிறோன், ஜெனிலின் ஆகியோரின் அருமைப்பேரனுமாவார்.

அன்னாரின் திருவுடல் இறம்பைக்குளம் வவுனியா அன்னாரது இல்லத்திலிருந்து 26.11.2019 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்ட பின்னர் பூதவுடல் இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இறம்பைக்குளம், வவுனியா.

(CS 29159)(14.17)

தகவல்: குடும்பத்தினர்.

# மணிவிழா வாழ்த்து

## திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன்

(B. A. Tamil Dip. in. Edu. M.A Tamil)




**சேவை விபரம்**

- ஆசிரியர்
  திரு/ ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி
  14.12.1987 - 11.01.1995
- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
  12.01.1995 - 10.01.2012
  ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
- வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி.
  11.01.2012 - 25.03.2014
- உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
  வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி
  26.03.2014 - 27.02.2018
- ஆசிரியர்
  யா/ சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
  28.02.2018 - 26.11.2019

32 வருடகாலம் சிறப்பான கல்விப்பணியினை ஆற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன் அவர்களது ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் தமிழ்ப்பணி தொடரவும் வாழ்த்துகின்றோம்

பாடசாலை சமூகம்

யா/சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில், சாவகச்சேரி.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வண்ணை காமாட்சித் தாயின் கைகளில் 18 . 05 . 1954



நிகரை ஞானவைரவரின் பாதக்கமலத்தில் 17 . 11 . 2017

## அமரர் நடராஜா ராஜா

(ஓய்வுபெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர், வவுனியா)

திதி:- கார்த்திகை அமாவாசை

ஈராண்டு ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்க அன்புத் தெய்வமே!
உமது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்

பிரதான வீதி, சங்கானை.
077 674 7515

குடும்பத்தினர்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.10.2019 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த குடும்பத்தலைவி

## திருமதி வேலுப்பிள்ளை கண்ணகை

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நேற்று (25.11.2019) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (27.11.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரண நிகழ்விலும் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக் கின்றோம்.

தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

37/12, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(CS 29534)(04.17)

குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர்
ஆலய பரிபாலனச்சபை உறுப்பினர்
**சு.சிறிஸ்கந்தராசா (கதிரமலை)**
அவர்களின் பாசமிகு புதல்வன்

**சிறிஸ்கந்தராசா நக்கீரன்**

அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
ஓடையம்பதியானை சென்றடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபையினர்,**
**ஓடையம்பதி கற்பக விநாயகர்**
**ஆலயம், உரும்பிராய்.**

(cs.29535)(13.17)



பிறப்பு 15.04.1986 இறப்பு 24.11.2019

## துயர்பகிர்கின்றோம்

எமது ஆலய பரிபாலனசபை
உறுப்பினர்
**பா.ஜெயதீஸ்வரன் (ஈசன்)**
அவர்களின் மாமனார்

**அமரர் கந்தையா**
**குமாரசாமி**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபையினர்**
**ஓடையம்பதி கற்பக விநாயகர்ஆலயம், உரும்பிராய்.**

(CS 29536)(4.17)

## வீடு வாடகைக்கு உண்டு

மாணிக்கத் தியாகராஜா வீதியில் அமைந்துள்ள
சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு உண்டு.
**சுன்னாகம் சந்தைக்கு அருகாமையில்.**

**075 992 6273**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள
பிரபல அச்சகம் ஒன்றுக்கு
வைண்டிங்
(புத்தகம் கட்டுனர்) வேலைக்கு
பணியாளர்கள் தேவை.

(C 11767)(14.17)

**077 714 1444**

# GOVERNMENT OF DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
# DISTRICT SECRETARIAT, MULLAITIVU.
## *PROCUREMENT NOTICE FOR SECURITY SERVICE-2020*

**The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu invites Sealed Bids from eligible and qualified Bidders for the Supply of Security Service-2020 for under mentioned departments for One year period.**

| Details of Bid for Security Service | Bid Security | Nonrefundable fees (Rs) |
|---|---|---|
| 1. District Secretariat, Mullaitivu<br>2. Govt. Agent Bungalow, Mullaitivu<br>3. Divisional Secretariats- Maritimepattu<br>4. Divisional Secretariats –Puthukkudiyiruppu<br>5. Divisional Secretariats – Oddusuddan<br>6. Divisional Secretariats - Thunukkai<br>7. Divisional Secretariats - Manthai East<br>8. Divisional Secretariats - Welioya.<br>9. Ladies Quarters, Selvapuram. | 60000.00 | 1000.00 |

1. The complete set of Bidding Documents in English Language could be purchased on the submission of a written application to the Procurement unit at District Secretariat, Mullaitivu from **9.00 A.M. to 15.00hrs** on normal working days from **26th of November 2019 to 09th December 2019** by producing the receipt for the payment of non-refundable fee of **Rs. 1000 .00** made to the **Shroff**, in this office. The method of payment should be by cash.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of Cleaning Service, valid until the date of closing of the bid. Further the registration should be valid at the date of award.
3. All bidding documents should be accompanied by a Bid Security for relevant amount above mentioned obtained from a recognized Bank approved by the Central Bank of Sri Lanka in favor of the District Secretary, Mullaitivu and valid up to **28 days** from the date of closing the Bids.
4. The amount of performance security is 5% of the initial contract price and shall be valid till 28 days beyond the contract period. Performance security shall be unconditional bank guarantee, and shall be released 28 days after the actual completion of contract date.
5. The reference should be clearly mentioned on the top left hand corner of the envelope as **"Security Service for -2020"**
6. Seal bids (Original & Duplicate) shall be sent by registered post addressed to the **"Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu"** and be delivered onorbefore **15.00hrs on 10th December 2019** and will be opened same time immediately in the presence of the Bidders or their Representatives.

Further details can be clarified by contacting to the Telephone no. **0212290096**.

**Mrs.R.Ketheeswaran**
**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Mullaitivu.**

# GOVERNMENT OF DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
# DISTRICT SECRETARIAT, MULLAITIVU.
## *PROCUREMENT NOTICE FOR CLEANING SERVICE -2020*

***Cleaning Service for 2020 for District Secretariat, Govt. Agent Bungalow and other six Divisional Secretariats in Mullaitivu District***

**The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu invites Sealed Bids from eligible and qualified Bidders for the Supply of Cleaning Service-2020 for under mentioned departments for One year period.**

| Details of Bid for Cleaning Service | Bid Security | Nonrefundable fees (Rs) |
|---|---|---|
| 1. District Secretariat, Mullaitivu<br>2. Govt. Agent Bungalow, Mullaitivu<br>3. Divisional Secretariats- Maritimepattu<br>4. Divisional Secretariats –Puthukkudiyiruppu<br>5. Divisional Secretariats – Oddusuddan<br>6. Divisional Secretariats - Thunukkai<br>7. Divisional Secretariats - Manthai East<br>8. Divisional Secretariats -.Welioya. | 50000.00 | 1000.00 |

1. The complete set of Bidding Documents in English Language could be purchased on the submission of a written application to the Procurement unit at District Secretariat, Mullaitivu from **9.00 A.M. to 15.00hrs** on normal working days from **26th of November 2019 to 09th December 2019** by producing the receipt for the payment of non-refundable fee of **Rs. 1000 .00** made to the **Shroff**, in this office. The method of payment should be by cash.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of Cleaning Service, valid until the date of closing of the bid. Further the registration should be valid at the date of award.
3. All bidding documents should be accompanied by a Bid Security for relevant amount above mentioned obtained from a recognized Bank approved by the Central Bank of Sri Lanka in favor of the District Secretary, Mullaitivu and valid up to **28 days** from the date of closing the Bids.
4. The amount of performance security is 5% of the initial contract price and shall be valid till 28 days beyond the contract period. Performance security shall be unconditional bank guarantee, and shall be released 28 days after the actual completion of contract date.
5. The reference should be clearly mentioned on the top left hand corner of the envelope as **"Cleaning Service for -2020"**
6. Seal bids (Original & Duplicate) shall be sent by registered post addressed to the **"Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu"** and be delivered onorbefore **15.00hrs on 10th December 2019** and will be opened same time immediately in the presence of the Bidders or their Representatives.

Further details can be clarified by contacting to the Telephone no. **0212290096**.

**Mrs.R.Ketheeswaran**
**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Mullaitivu.**

# GOVERNMENT OF DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
# DISTRICT SECRETARIAT, MULLAITIVU.
## *PROCUREMENT NOTICE FOR VEHICLE CLEANING SERVICE -2020*

***Vehicle Cleaning Service for 2020 for District Secretariat Mullaitivu.***

**The Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu invites Sealed Bids from eligible and qualified Bidders for the Supply of Vehicle Cleaning Service-2020 for under mentioned Vehicles for One year period.**

| Details of Bid for Vehicle Cleaning Service | Bid Security | Nonrefundable fees (Rs) |
|---|---|---|
| 1. Toyota (Prado)<br>2. Toyota (Land Cruizer)<br>3. Toyota (Hilux)<br>4. Toyota (Coaster Bus)<br>5. Toyota (Hiace)<br>6. Toyota Single cap<br>7. Mitsubishi Pickup<br>8. Nissan Pickup<br>9. TATA Single cap<br>10. ISSUE Pickup<br>11. TAFE Tractor<br>12. Motor Lorry-Tanker(LANKA ASHOKLEYLAND) | 60000.00 | 1000.00 |

1. The complete set of Bidding Documents in English Language could be purchased on the submission of a written application to the Procurement unit at District Secretariat, Mullaitivu from **9.00 A.M. to 15.00hrs** on normal working days from **26th of November 2019 to 09th December 2019** by producing the receipt for the payment of non-refundable fee of **Rs. 1000 .00** made to the **Shroff**, in this office. The method of payment should be by cash.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field of Cleaning Service, valid until the date of closing of the bid. Further the registration should be valid at the date of award.
3. All bidding documents should be accompanied by a Bid Security for relevant amount above mentioned obtained from a recognized Bank approved by the Central Bank of Sri Lanka in favor of the District Secretary, Mullaitivu and valid up to **28 days** from the date of closing the Bids.
4. The amount of performance security is 5% of the initial contract price and shall be valid till 28 days beyond the contract period. Performance security shall be unconditional bank guarantee, and shall be released 28 days after the actual completion of contract date.
5. The reference should be clearly mentioned on the top left hand corner of the envelope as **"Vehicle Cleaning Service for -2020"**
6. Seal bids (Original & Duplicate) shall be sent by registered post addressed to the **"Chairman, Departmental Procurement Committee, District Secretariat, Mullaitivu"** and be delivered onorbefore **15.00hrs on 10th December 2019** and will be opened same time immediately in the presence of the Bidders or their Representatives.

Further details can be clarified by contacting to the Telephone no. **0212290096**.

**Mrs.R.Ketheeswaran**
**Chairman,**
**Departmental Procurement Committee,**
**District Secretariat,**
**Mullaitivu.**

# யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க.த.க வித்தியாலயம்

## தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு - 2019



ச.கதீசன் 186, வி.ஆரபி 182, மு.சாயித்தியன் 180, ரு.வைதங்கி 176, அ.மதுரிகா 176, த.துவாரகா 174, செ.ரெறன்ஸ் 172, தே.சயன் 171, கி.லக்ஷிதா 168, த.அபிஷாலினி 165, சி.நிதர்சனா 164

அ.கிருத்திகா 163, த.கஜனிகா 162, அ.அனுசன் 162, பி.கிஷோபிகன் 161, பு.கயலக்ஷி 160, கு.றம்மியன் 159, து.சாருஜன் 158, பி.அனுருத்தன் 158, ம.சுரலயன் 157, ந.திவ்யா 157, நி.கேம்ஸ்ஷோன் 156



யோ.கிரும்சிகன் 156, டோ.ஜஸ்மின் 154, த.ஜயந் 154



**1வது வரிசையில் இருப்போர்**
த.கார்னிகா - 152, பா.தர்னிகா - 152, உ.சபினா - 152, உ.அனோயன் - 152, சி.கிஷானா - 149, இ.யதுர்சி - 149, ர.திறோசிகா - 148, சு.ஹரினி - 147, ம.அக்ஷயன் - 147, சி.ஒஸ்வின் - 147, கு.பிறிசாருஜன் - 146, க.கிருஷாலினி - 146, ம.அனுக்ஷன் - 141, ச.நதீபன் - 140, நே.கீர்திகா - 140

**2வது வரிசையில் நிற்போர்**
லோ.யோதீசன் - 138, இ.பாதுசன் - 137,வ.கபீசன் - 137, சு.தர்சிகன் - 135, க.பிருந்திகா - 135, கீ.லதுஸ்ரிகா -134, ர.மதுமிதா - 134, அ.கீர்த்திகா - 134, தி.கனிஸ்ரன் - 134, ஜெ.நிவ்ஜித் - 133, ஜெ.பாருஸ்னியா - 132, பா.மிதுநாத் -123, சி.ஜெருசா - 132, ஶ்ரீ.லக்ஷன் - 131, செ.பிரதாபன் - 130

**3வது வரிசையில் நிற்போர்**
சு.லிசாந் - 129, றி.வேனுஜா - 128, தீ.ஜஸ்ரின் - 123, செ.செகான் - 118, கோ.துவிஜயன் - 120, ற.கோசிகா - 110, க.அனுஸ்ரா - 115, லி.கௌதமி - 114 நி.தனுஸ்காந் - 113, ஜெ.பபிலாஸ் - 113, ம.கிருத்திகா - 105, மோ.சாருஜா - 103, ச.அதிஸ்ரா - 102,ய.அகிபன் - 100, ஜெ.யதுநயன் - 98, க.அனுஸ்ரன் - 93, க.டிசாந் - 92, ஜெ.வேணுஜன் - 60

**எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்டு எமது பாடசாலைக்கு பெருமதிப்பைப் பெற்றுத் தந்த எமது அதிபர், ஆசிரியர்களை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

- பாடசாலைச் சமூகம் -

**யா/நல்லூர் சென் பெனடிக்ற் றோ.க வித்தியாலயம்**



சு.ஸ்ரீகுமரன்




# 55ஆண்டுகளை நிறைவுசெய்துள்ள வலிகாமம் தெற்கின் அறிவாலயம்

**மிடுக்கோடு முன்னேறிய நூலகம் இன்று 26 ஆயிரம் நூல்களுடன் வளர்ச்சி கண்டுள்ளது. 3 ஆயிரத்து 500 அங்கத்தவர்களும், 498 சிறுவர் அங்கத்தவர்களும் இரவல் பெற்று நூல்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் பத்திரிகைப் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் வழங்கும் பகுதி என்பன சிறப்பாக இயங்கி வருகின்றன.**

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் வாழ்கின்ற, புலம்பெயர் தேசங்கள் உட்பட வேறிடங்களில் வசிக்கின்ற கணிசமானோரது அறிவு விருத்திக்கும், ஆன்ம விருத்திக்கும் காலாக இருந்த அறிவாலயம் சுன்னாகம் பொது நூலகமாகும். இந்த நூலகம் அறிவொளி பரப்பிய ஆலமரமாக நிமிர்ந்து நின்று ஐம்பத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. அதனை மேலும் வளர்த்தெடுத்து எமது அறிவுப் பொக்கிசமாகப் பேண வேண்டியது எம் எல்லோரதும் கடமையாகும்.

உள்ளூராட்சி மன்ற எல்லைகள் மறுசீரமைப்பின் கீழ் 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சுன்னாகம் பட்டின சபை இயங்க ஆரம்பித்தது. செனட்டர் பொ.நாகலிங்கம் தலைமையிலான உள்ளூராட்சி சபை சுத்தமான, மின்னொளி வசதியுடனான நகரமாக சுன்னாகத்தை ஆக்கியதுடன் வீதிகளுக்குப் பெரியார்களது பெயர்களைச் சூட்டியதுடன் சுன்னாகம் பொது நூலகத்தையும் ஆரம்பித்தது.

**பயணத்தின் ஆரம்பம்**

காங்கேசன்துறை வீதியில் ஆயுர்வேத வைத்தியர் தம்பையாவின் இல்லத்தில் 1964ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நூலகத்தை அப்போதய யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நெவில் ஜெயவீர திறந்து வைத்தார். பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் உசாத்துணைப் பகுதியும் ஆரம்பத்தில் செயற்பட்டன. அக்காலத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் தலைமையில் ஆய்வு வட்டம் செயற்பட்டதோடு ஒவ்வொரு போயா தினத்திலும் பல்வேறு அறிஞர்களின் உரைகளும் இடம்பெற்றமை முக்கியமானதாகும். பின்னர் நூலகம் பண்டிதர் சிவசம்புவின் இல்லத்துக்கு இடம் மாற்றப்பட்டது. அக்காலத்தில் சமய வகுப்புக்களும் இடம்பெற்றன. 1972ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி வி.எம். குமாரசாமியின் காணியில் இருந்து 3 பரப்பு கொள்வனவு செய்யப்பட்டு, நூலகம் கட்டப்பட்டு 1972ஆம் ஆண்டு ஜூன் ஐந்தாம் திகதி அப்போதய உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.அல்விஸால் திறந்து வைக்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்து திரட் டப்பட்ட நிதி, சபை நிதி ஆகியவற்றைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பொதுநூலகம் பல்வேறு காலங்களிலும் பல்வேறு தரப்பினரதும் பங்களிப்புடன் வளர்ச்சியும் விருத்தியும் பெற்று, யாழ்ப்பாணத்தின் சிறப்பு மிக்க நூலகமாக மிளிர்கின்றது. போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த நிலையில் புத்தக இழப்பையும் நூலகம் சந்தித்தது. எனினும் மிடுக்கோடு முன்னேறிய நூலகம் இன்று 26 ஆயிரம் நூல்களுடன் வளர்ச்சி கண்டுள்ளது. 3 ஆயிரத்து 500 அங்கத்தவர்களும், 498 சிறுவர் அங்கத்தவர்களும் இரவல் பெற்று நூல்களைப் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் பத்திரிகைப் பகுதி, உசாத்துணைப் பகுதி, இரவல் வழங்கும் பகுதி என்பன சிறப்பாக இயங்கி வருகின்றன.



**2007ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டது**

2007ஆம் ஆண்டு நூலக ஆவணமாக்கல் சபையால் தரம் 2 நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்ட இந்த நூலகம் அவ்வாண்டு சிறப்பு விருதினையும் பெற்றுக் கொண்டது. அத்துடன் 2009ஆம் ஆண்டு பிரதேச மக்களின் அறிவு விருத்தி மற்றும் தகவல் தேடல் திறனை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு உயர்தர நூலக சேவையொன்றை நடத்திய பங்களிப்புக்காக தேசிய நூலகத்தால் சிறப்புத் திறன் விருது வழங்கப்பட்டது. 2011ஆம், 2012ஆம் ஆண்டுகளில் தேசிய வாசிப்பு மாத செயற்திட்டங்களுக்கான பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட நூலகம் 2013ஆம் ஆண்டில் வடமாகாணத்தின் சிறந்த நூலகமாக கல்விச் சேவைகள் அமைச்சால் தெரிவு செய்யப்பட்டதுடன் சுவர்ண புரவர விருதினையும் தட்டிக் கொண்டது.

இத்தகைய வெற்றிக்குப் பின்னால் இக்காலத்தில் நூலகராக இருந்த க.சௌந்தரராஜன் ஐயரின் பங்களிப்பு குறித்துரைக்கத் தக்கதாகும். இவர் ஆசிரியராக இருந்து வெள்ளிமலை என்ற சஞ்சிகையை வெளியிட்டார். வெள்ளிமலை 2007ஆம் ஆண்டுமுதல்2012ஆம்ஆண்டு வரை 12 இதழ்கள் வெளிவந்துள்ளன. அத்துடன் பல்வேறு தகவல்களையும் உள்ளடக்கிய சுன்னாகம் பொது நூலக பொன்விழா மலரும் இவரால் தொகுக்கப் பட்டுள்ளது. அத்துடன் ஞானவிலாசம் என்ற கலை, இலக்கிய கருத்தாடல்களும் இவரது காலத்தில் நடத்தப்பட்டதுடன் பிரதேச அறிஞர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். வெள்ளிமலை சஞ்சிகை தொடர்ந்தும் வருடத்துக்கு ஒன்றாக வெளியிடப்பட்டு வருகிறது.

**வேண்டுகைகள்**

சுன்னாகம் பொதுநூலகத்தின் இன்றுள்ள பிரதான பிரச்சினை இடநெருக்கடியே. 3 பரப்பு காணிக்குள் 2 ஆயிரத்து 814 சதுர அடி மாடிக் கட்டடத்துக்குள் எல்லாவற்றையும் அடக்குவது சாத்தியமானதல்ல. காணி கொள்வனவு குறித்துச் சிந்திக்க வேண்டும். மேலும் நவீன நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மின்னூலகப் பயன்பாடு, எண்ணிம நூலகப் பயன்பாடு என்பன உருவாக்கப்பட வேண்டும். அது மட்டுமன்றி ஈழத்திலும், புலம்பெயர் தேசங்களிலும், இந்தியாவிலும் வெளியிடப்படும் ஈழத்தமிழ் நூல்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். அது மட்டுமன்றி பிரதேசத்தின் சமூக நிறுவனங்களின் மலர்கள், அரும்பொருள்கள் என்பவற்றைப் பேணும் ஆவணக் காப்பகம் ஒன்றும் இந்நூலகத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

புதிய பிரதேச சபை நிர்வாகம் பயனுள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. தற்போது புதிதாக மேல்மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. பஸ் தரிப்பு நிலையத்தில் பத்திரிகைப் பகுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சிறுவர் நூலகத்தை வலுப்படுத்தும் வேலைகள் நடைபெறுகின்றன. வாசிப்பு மாதத்தையொட்டி கிராமங்களை நோக்கி நூலக சேவைகளைக் கொண்டு செல்லும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி முன்பள்ளிகள், சிறுவர் கழகங்கள், சனசமூக நிலையங்களின் அனுசரணையுடன் சிறுவர்களின் வாசிப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலம் சுன்னாகம் பொது நூலகத்தை வலுப்படுத்தி அறிவார்ந்த சமூக உருவாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே பிரதேச வாசகர்களின் அவாவாகும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## மாவீரர் தினத்தில் ஒன்றிணைவோம்!

தமிழர்களுக்காகத் தமது இன்னுயிர்களை ஈந்து சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளின் நினைவுநாள், மாவீரர் நாள்.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் முற்றிலுமாக மறைந்துபோயிருந்த மாவீரர் தின நிகழ்வுகள் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் மீண்டும் மெல்ல வெளிக்கிளம்பத் தொடங்கின.

மூன்று வருட காலத்தில் அவை இப்போது ஒரு கட்டுக்கோப்புக்குள் வந்து சேர்ந்திருக்கின்றன. இம்முறையும் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

துயிலும் இல்லங்களின் துப்புரவு மாவீரர் தினத்திற்கான தயார்ப்படுத்தல்கள் என்று ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த மூன்று வருடங்களைப் போன்று அல்லாமல் இந்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க முடியுமா இல்லையா என்கிற கேள்வி அனைவர் மனதிலும் தொக்கி நின்கின்றது.

மாவீரர் தினத்தைக் கடைப்பிடிப்பதற்கான அனுமதியோ வாய்மூல வாக்குறுதியோ இதுவரையில் எவராலும் வழங்கப்படவில்லை. 2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர் நடந்த முதலாவது மாவீரர் தினம் கூட இத்தகையதொரு சூழ்நிலையிலேயே நடந்தது.

கொழும்பு ஆட்சியாளர்கள் தடையேதும் விதிக்காத போதும் பகிரங்க அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் நிகழ்வைத் தொடங்கிய கணம் வரைக்கும் நிகழ்வு நடக்குமா நடக்காதா என்கிற விறுவிறுப்பு காணப்பட்டது. அதுபோன்றே இந்தத் தடவையும் நிலமை உள்ளது.

இதுவரையான ஏற்பாடுகளுக்குப் படையினர் எந்தவித முட்டுக்கட்டையும் ஏற்படுத்தவில்லை. ஆனாலும் கடைசி நாளான நாளை துயிலுமில்லங்களில் விளக்கேற்றி மாவீரர் நாளைக் கடைப்பிடிக்க அனுமதிப்பார்களா என்கிற கேள்விக்கும் தெளிவான விடை இல்லை.

எப்படியிருப்பினும் அமைதிக்குப் பங்கமில்லாத வகையில், பொது மக்களுக்குக் குழப்பம் ஏற்படுத்தாத வகையில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுமாக இருந்தால் அதனைக் கண்டுகொள்ளாமல் இருக்கும் போக்கையே முப்படையினரும் பொலிஸாரும் மேற்கொள்ளுவர், அதற்கேற்ற வகையிலான அறிவுறுத்தல்களே வழங்கப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

ஆங்காங்கே சில இடங்களில் பொலிஸாருடன் நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடன் பொலிஸார் முரண்பட்டுக்கொண்டனர் என்பதைத் தாண்டி பெரிதாக அச்சுறுத்தும் பாணியிலான நிகழ்வுகள் எவையும் நடக்கவில்லை.

எனவே நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் செம்மையான திட்டமிடலையும் குழப்பம், வன்முறையற்ற நிகழ்வு ஏற்பாட்டையும் இறுக்கமாகப் பேணுவது அவசியம். எதிர்காலத்தைய நிகழ்வுகளையும் கணக்கிலெடுத்து இந்த விடயங்களைக் கையாளவேண்டும்.

மாவீரர்கள் கனவான தனித் தமிழீழம் இன்றைய சூழலில் சாத்தியமற்றது என்றாகிவிட்ட போதும் சுயமரியாதையுடனும் மதிப்புடனும் சமத்துவத்தோடு வாழும் நிலையை இந்த நாட்டில் ஏற்படுத்துவதில் அவர்களின் சேவை அளப்பரியது.

எனவே நாளை மாலை மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் செல்ல முடிந்தவர்கள் அங்கு நேரில் சென்று தமது அஞ்சலிகளைத் தெரிவிக்கும் அதேவேளை, வீடுகளில் இருப்பவர்கள் அந்த நேரத்தில் விளக்குகளைக் கொழுத்தி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும்.

தமக்குப் பின் வந்த சந்ததிகள் நலமோடும் சுபீட்சமோடும் வாழவேண்டும் என்று தமது இன்னுயிர்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களுக்கு அஞ்சலி செலுத்த ஒவ்வொருவரும் மனமார முன்வரவேண்டும். அதுவே தமிழர்களுக்கு ஆன்மபலத்தைக் கொடுக்கும்

அத்தோடு தமிழர்களின் வரலாற்றைச் சந்ததிக் கடத்தல் செய்வதற்கும் ஏதுவாக அமையும்.

# வெனிஸ் நகரம் சொல்லும் பாடம்



> வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடலுக்கு அடியில் நகரும் தடுப்புகள் நீண்ட காலமாகக் கட்டப்பட்டுவந்தன. இந்தப் பணியை விரைந்து முடிக்க வெனிஸ் முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். ஆனால், இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் மோசமான சேதத்துக்கு அதீதமான காற்று, மிகுந்த கன மழை, தாழ்வான நில மட்டம், உயரும் கடல் மட்டம் போன்றவை காரணங்களாகும்.

நீர்மட்டம் அதிகரிப்பு என்பது இத்தாலிய நகரமான வெனிஸில் ஆண்டுதோறும் நிகழ்வதே. வழக்கமாக வெனிஸ் நகரவாசிகளும் யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரிய நகரம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் வெனிஸ் நகரத்துக்குக் குளிர் காலத்தில் வருகை தருபவர்களும் கால்வாய்க் கரைகளைத் தாண்டி நீர் ததும்புவதையும் செயின்ட் மார்க்ஸ் சதுக்கத்தின் சாக்கடைகள் குமிழிடுவதை யும் கண்டிருப்பார்கள்.

ஆனால், இந்த ஆண்டு அந்தச் சதுக்கம் முழுவதும் நீரின் அடியில் சென்றுவிட்டது. இது 50 ஆண்டுகளில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளமாகும். வெனிஸின் 85 வீதமான பகுதிகளை நீர் சூழ்ந்திருக்கிறது. நெருக்கடிநிலையும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடலுக்கு அடியில் நகரும் தடுப்புகள் நீண்ட காலமாகக் கட்டப்பட்டுவந்தன. இந்தப் பணியை விரைந்து முடிக்க வெனிஸ் முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். ஆனால், இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் மோசமான சேதத்துக்கு அதீதமான காற்று, மிகுந்த கன மழை, தாழ்வான நில மட்டம், உயரும் கடல் மட்டம் போன்றவை காரணங்களாகும்.

இவை யாவும் பருவநிலை மாற்றத்தோடு தொடர்புடையவையே. 'புவியை எந்த அளவுக்கு நாம் சூடாக்குகிறோமோ அந்த அளவுக்கு மிக அதிகமான கனமழை இருக்கும்; அந்த அளவுக்குக் கடல் மட்டமும் அதிகமாக உயரும்' என்கிறார் பருவநிலை ஆய்வாளரான ஆண்டெர்ஸ் லீவர்மன்.

கடந்த ஆயிரத்து 200 ஆண்டுகளில் செய்ன்ட் மார்க் பேராலயத்தை ஆறு முறை வெள்ளம் சூழ்ந்திருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் நான்கு முறை சூழ்ந்திருக்கிறது. எதிர்காலம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்று லீவர்மன் கூறுகிறார். 2 ஆயிரத்து 100ஆம் ஆண்டுக்குள் வெனிஸ் நகரம் நீருக்கு அடியில் சென்றுவிடும் என்று கணிக்கப்படுகிறது. வெனிஸ் என்றில்லை ஹாம்பர்க், ஷாங்காய், ஹொங்காங், நியூயார்க் போன்ற பெரிய கடற்கரை நகரங்களின் பெரும்பான்மையான இடங்கள் நீரின் அடியில் செல்ல வாய்ப்பிருப்பதால் அதற்கேற்ற வகையில் அந்த நகரங்கள் தங்களைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

'கடல் மட்டம் உயர்வதைத் தடுப்பதற்கு ஒரே வழி நிலக்கரி, எண்ணெய், எரிவாயு போன்றவற்றின் பாவனையை நிறுத்துவதே' என்கிறார் லீவர்மன். பருவநிலை மாற்றம் என்பது புரளி என்று சொல்பவர்களுக்கு இது ஏதோ அர்த்தமில்லாத எச்சரிக்கைபோல் தோன்றலாம்.

ஆனால், பருவநிலை நெருக்கடியின் 'நடுவே நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்குக் கிடைத்திருக்கும் சான்றுகளின் வெள்ளத்தில் இப்போது வெனிசின் வெள்ளமும் சேர்ந்திருப்பதால் உடனடியான, ஒருமித்த செயல்பாடு தேவைப்படுகிறது.

*நன்றி: இந்து தமிழ் திசை*



■ஆர்.லயனல்

# டெங்கு என்னும் பேராபத்தை தவிர்க்க விழிப்பாயிருப்போம்

மழைக் காலங்கள்தோறும் டெங்குக் காய்ச்சல் பரவி மக்களின் உயிர்களைக் காவு வாங்குவது தொடர்கதையாகிவிட்டது. 19ஆம் நூற்றாண்டில் அதிகமாகப் பரவ ஆரம்பித்த டெங்கு, இன்று 100க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலவும் முக்கிய பிரச்னையாக விஸ்வரூபமெடுத்து நிற்கிறது. தீவிரமழை தொடங்கும்முன்பே, பல்வேறு இடங்களில் டெங்கு காய்ச்சல் பரவி, அச்சுறுத்தி வருகிறது. டெங்கு பாதிப்பு அதிகமாகக் காரணம் மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததே என்கிறார்கள் மருத்துவர்கள். டெங்கு காய்ச்சல் வரக் காரணம் என்ன?, அது எப்படி மற்றவருக்குப் பரவுகிறது?, மற்ற காய்ச்சல்களிலிருந்து எப்படி அதை வேறுபடுத்தி அறிவது?, அதற்கான பரிசோதனைகள், சிகிச்சை முறைகள் என்னென்ன? என அனைத்துச் சந்தேகங்களுக்கும் இங்கே விடை காணலாம்.

**டெங்கு காய்ச்சல் என்பது என்ன?**
டெங்கு என்பது ஒரு வகையான வைரஸ் காய்ச்சல். டென்1, டென்2, டென்3, டென்4 என டெங்குவில் 4 வகைகள் உள்ளன.

**டெங்கு எப்படிப் பரவுகிறது?**
நல்ல தண்ணீரில் உருவாகக்கூடிய ஏடிஸ் ஏஜிப்தி என்ற ஒரு வகை நுளம்புகள் மூலம் இந்த வைரஸ் பரவுகிறது. ஏடிஸ் நுளம்புகள் மூன்று வாரங்களுக்குமேல் உயிர்வாழும். பகல் நேரங்களில் மட்டுமே கடிக்கும். உடல் மற்றும் கால்களில் கறுப்பு மற்றும் வெள்ளைநிறப் புள்ளிகள் கொண்ட உடலமைப்பைக் கொண்டுள்ளதால், இவை புலி நுளம்புகள் என்றும் ஒருசில வட்டாரங்களில் அழைக்கப்படுகின்றன.

**எப்படி நோயைப் பரப்புகின்றன?**
வீடுகளில் சரியாக மூடப்படாத தகரங்கள், தண்ணீர் பிடிப்பதற்காக பைப்லைன்கள் அருகே தோண்டப்பட்ட குழிகள், மொட்டைமாடிகளில் போட்டுவைத்திருக்கும் உபயோகமற்ற பொருள்கள், காலிமனைகளில் கிடக்கும் பிளாஸ்டிக் கோப்பைகள், பயனற்ற பொருள்கள், வீடுகளில் சரியாக மூடப்படாத தரைத் தொட்டிகள் (சம்ப்), மேல்நிலைத் தொட்டிகள், டயர்கள், பயன்படுத்தாத உடைந்த சிமென்ட் தொட்டிகள், நீண்டகாலமாகக் கழுவப்படாத தொட்டிகள் போன்றவற்றில் தேங்கியிருக்கும் நல்ல தண்ணீரில் ஏடிஸ் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுகின்றன. இது டெங்கு பாதிப்புள்ளவர்களைக் கடித்துவிட்டு மற்றவர்களைக் கடிக்கும்போது ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுகிறது.

> நல்ல தண்ணீரில் உருவாகக்கூடிய ஏடிஸ் ஏஜிப்தி என்ற ஒரு வகை நுளம்புகள் மூலம் இந்த வைரஸ் பரவுகிறது. ஏடிஸ் நுளம்புகள் மூன்று வாரங்களுக்குமேல் உயிர்வாழும். பகல் நேரங்களில் மட்டுமே கடிக்கும். உடல் மற்றும் கால்களில் கறுப்பு மற்றும் வெள்ளைநிறப் புள்ளிகள் கொண்ட உடலமைப்பைக் கொண்டுள்ளதால், இவை புலி நுளம்புகள் என்றும் ஒருசில வட்டாரங்களில் அழைக்கப்படுகின்றன.

**எத்தனை நாள்களில் வளர்ச்சியடையும்?**
ஏடிஸ் நுளம்புகள் தண்ணீரில் முட்டையிட்டு கொசுப்புழு, கூட்டுப்புழு பருவம் வரைவர 7 முதல் 10 நாள்களாகும். இந்த நுளம்புகளின் முட்டைகள் ஓராண்டுவரையிலும் அழியாமல் இருக்கும். மழைக்காலங்களில் நல்ல நீர் தேங்கியிருக்கும் இடங்களில் மீண்டும் இந்த முட்டைகள் உயிர்பெற்று நோயைப் பரப்பும். நுளம்புகள் உருவாகும் இடங்களை அழித்து சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டால் மட்டுமே இந்தக் கொசுக்களின் வளர்ச்சியைத் தடுக்க முடியும்."


**டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் என்னென்ன?**
காய்ச்சல், சோர்வு, தலைவலி, உடல்வலி, வாந்தி, வயிற்று வலி, கண்ணுக்குப் பின்புறம் வலி, எலும்பு வலி ஆகியவை டெங்கு காய்ச்சலின் முக்கியமான அறிகுறிகளாகும்.

**காய்ச்சல் வந்த பிறகு என்ன செய்ய வேண்டும்?**
காய்ச்சல் அறிகுறி தெரிந்தவுடன் உடனடியாக மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெற வேண்டும். மருத்துவரால் மட்டுமே தேவையான மருத்துவப் பரிசோதனை செய்து, இது டெங்கு காய்ச்சலா' அல்லது வேறு காய்ச்சலா' என்பதைக் கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க முடியும். டெங்கு காய்ச்சலைக் கண்டறிய என்ன பரிசோதனைகள் செய்யப்படுகின்றன? ஆரம்ப அறிகுறிகள் அனைத்தும் வைரஸ் காய்ச்சல்களில் காணப்படும் பொதுவான குணங்கள் என்பதால் உடனே நோயை உறுதி செய்ய இயலாது. காய்ச்சல் 3 நாள்களுக்கு மேல் நீடித்தால், உடனே மருத்துவமனைக்குச் சென்று, என்.எஸ்.ஐ ஆன்டிஜன், டெங்கு ஐ.ஜி.எம். அல்லது டெங்கு ஐ.ஜி.ஜி உள்ளிட்ட குருதிப் பரிசோதனைகளை செய்துகொள்ளவேண்டும்.
பொதுவாக ஒருவருக்கு குருதித் தட்டணுக்களின் எண்ணிக்கை சுமார் 3 லட்சம் வரை இருக்கும். டெங்கு காய்ச்சல் வந்தவருக்கு குருதித் தட்டணுக்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்துக்கும் கீழே குறைந்துவிடலாம். எனவே, ப்ளேட்லெட் என்னும் குருதித் தட்டணுக்களின் எண்ணிக்கை மற்றும் குருதியின் நீர்ப்பளவு உள்ளிட்ட பரிசோதனைகளையும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் 2 அல்லது 3 நாள்கள் தொடர்ந்து செய்து கொள்ளவேண்டும்.'

**டெங்குவுக்கு எந்த மாதிரியான சிகிச்சை அளிக்கப்படுகிறது?**
டெங்கு காய்ச்சலுக்கு எனத் தனி சிகிச்சை எதுவும் இல்லை. காய்ச்சலைக் கட்டுப்படுத்த பாராசிட்டமால் மாத்திரையும், உடல் வலியைப் போக்க உதவும் மாத்திரைகளும்தரப்படும். சிலருக்கு மட்டுமே அதிர்ச்சி நிலை ஏற்படும். அதற்கு குளுக்கோஸ் மற்றும் சேலைன் தேவையான அளவுக்கு ஏற்றப்பட வேண்டும். வைரஸ் பாதிப்பால், குருதியில் உள்ள தட்டணுக்களின் எண்ணிக்கை குறை நதுகொண்டே வரும். தட்டணுக்கள் குறைந்தவர்களுக்கு அதை ஈடுகட்ட நரம்பு மூலமாக தட்டணுக்கள் கொண்ட குருதி செலுத்தப்பட வேண்டும். உடலில் உள்ள நீர்ச்சத்து குறையாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். கொசுவலைப் பாதுகாப்புக்குள் வைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும். டெங்கு ஐ.ஜி.எம்., ஹெமெட்டோ கிரீட் மற்றும் தட்டணுக்கள் பரிசோதனைகளின் மூலம் டெங்கு குணமாகிவிட்டதா என்று அறியலாம்.

**டெங்கு தடுப்பில் மக்களின் பங்களிப்பு**
வீடு மற்றும் சுற்றுப்புறங்களில் கிடக்கும் பயன்படுத்தாத பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் கோப்பைகள், தேங்காய் ஓடுகள், உடைந்த வாளி, டயர்கள் ஆகியவற்றை அகற்ற வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டிகளை வாரம் ஒருமுறை நன்றாகத் தேய்த்துக் கழுவி, நுளம்புபுகாதவாறு மூடிவைக்கவேண்டும். டெங்கு என்பது எமது கண்ணுக்கு நன்று புலப்படும் ஒரு சாக்கடை. அதற்குள் விழ வேண்டுமா இல்லையா என்பதைத் தீமானிக்க வேண்டியவர்கள் நாமே. ■

## டெங்கு நோய் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



**டெங்கு நோயினைப் பரப்பக்கூடிய நுளம்பின் முட்டையின் குணவியல்புகளாவன...**

* ஒரு தடவை 100 - 200 வரையான முட்டைகளை இடும்.
* இந்த முட்டைகள் ஒட்டிக்கொண்டிருந்து ஒரு வருடம் வரை அடுத்த நிலைக்காகக் காத்திருக்கக்கூடியவை.
* முட்டைகள் மூலம் டெங்கு வைரஸ் கிருமியானது அடுத்த சந்ததி நுளம்புகளுக்கும் கடத்தக்கூடியது.
* டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் முட்டையிடுவதற்கு மிகவும் குறைந்தளவு நீர் போதுமானதாகும்.

*மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

# மக்கள் அச்சமின்றி உறவுகளை நினைவுகூர்வதற்கு அனுமதிக்கவும்

## மாவை. எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 26

புதிய அரசு அமைந்துள்ள சூழலிலும் உறவுகளையிழந்த மக்கள் அச்சமின்றி ஆறுதலுடன் அஞ்சலியைச் செலுத்துவதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அவ்வாறு பாதுகாக்கப்படும்என்று நம்புகின்றோம். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்கள் கடந்த 70 ஆண்டுகளில் தமிழின விடுதலைக்காகத் தமிழர் இன அழிவிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகத் தமிழர் தம்மைத் தாமே ஆளும் உரிமையைநிலைநாட்டுவதற்காகஜனநாயக வழிகளில், ஆயுதப் போர் வழிகளில் தம்மை அர்ப்பணித்து வந்துள்ளனர். இலட்சக்கணக்கான உயிர்களை இனக் கலவரங்களிலும், போர்க்களத்திலும்பறிகொடுத்துள்ளனர். இன்னும் விடிவின்றிப் போராடுகின்றனர்.

தமிழின விடுதலைப் போராட்ட காலத்திலும் போரின் காலத்தின் எல்லையிலும் உயிர்களை அர்ப்பணித்தவர்களினதும், கொல்லப்பட்டவர்களினதும் ஆத்ம சாந்திக்காக நெஞ்சுருகிநினைவுகூருவதும், வழிபாடு செய்வதும் ஈமக்கடன் இயற்றுவதும் தமிழ் மானிடத்தின் மாண்புகளாகும், தமிழர் பாரம்பரியமாகும், தமிழ் மக்களின் நாகரிகமாகும்.

2009ஆம் ஆண்டு காலத்தில் போர்க்களத்திலும் பாதுகாப்பான இடங்களுக்கு வாருங்கள் என்று அரசு அழைத்த இடங்களிலும், மருத்துவமனைகளிலும், பதுங்குகுழிகளிலும்போரில்பாவிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்ட ஆயுதங்கள் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதால் இலட்சக்கணக்கானஉயிர்கள்காவு கொள்ளப்பட்டன என்ற செய்திகள் உள்ளன.

போரில் சரணடைந்தவர்கள், இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நாள்தோறும், வாழ்நாள் முழுவதும் கண்ணீரும் கம்பலையுமாய் அவலத்திலும் துயரத்திலும் வீழ்ந்து கிடக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட அந்த உறவுகள் ஆண்டு தோறும் குறிப்பாக கடந்த பத்து ஆண்டுகளில் ஆண்டுக்கு இரண்டு நாள்கள் அந்த உயிர்களுக்காகஆத்மாக்களுக்காகநெஞ்சுருகிநினைவுகூர்ந்துகண்ணீர்விட்டுக் கதறியழுது ஆறாத்துயரில் ஆறுதல்படும் நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர். அந்தஇருநாள்கள்கார்த்திகை 27, முள்ளிவாய்க்காலின் மே18 என்பனவாகஅமைகின்றன.

பண்டைத் தமிழர்கள் உயிரிழந்தோர் உடல்களைத் தாழியிலிட்டு நிலத்தில் புதைத்தனர். அத்தாழிகளில்ஆன்மநம்பிக்கையுடையோர் வழிபட்டதெய்வச்சிலைகளைவைத்தும் உயிர் பிரிந்த நாளில் நினைவுகூர்ந்து, வழிபாடு முதலான வழிபாடியற்றியும், கடல், நீர், நிலைகளில் ஈமக் கடனியற்றியும், கோவில்களிலும் இந்நாளில்துயிலும் இல்லங்களிலும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் அடைவதும் தமிழர்பண்பாடுநாகரிகம்மரபாகபாரம்பரியமாக மக்களில் போற்றப்பட்டு வருகிறது. இந்தப் பாரம்பரியம் பேணப்பட வேண்டும் பாதுகாக்கப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டுவரையில் மக்களின் இந்தப்பாரம்பரியத்தைத்துயிலும் இல்லங்களில் ஒன்றுகூடி உறவுகளுக்கு அஞ்சலி செய்வதை அரசு, இராணுவம் அனுமதிக்கவில்லை. 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின் அப்போதையஅரசதலைவரும்இராணுவத்தினரும்துயிலும் இல்லங்களில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளை அனுமதித்து வந்திருக்கிறார்கள். மக்களும் உறவுகளும் தாம் விரும்பிய இடங்களில்வீடுகளில்கோவில்களில் புனித நீர்நிலைகளில் ஆத்ம சாந்திவழிபாடுகளில்ஈமக்கடனியற்றுவதில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த நிலமைகள் தொடரும் என நம்புகிறோம். இந்த நிகழ்வுகளில் அரசியல்நலன்களும்இடமில்லை. அரசினதோ பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடோ தடைகளோ இடம் பெறாமலிருக்கவேண்டும். என்றுள்ளது. (ஒ,5)

# இராமநாதன் வீதியில் தேங்குகிறது குப்பை

*சுகாதாரச்சீர்கேட்டால்பல்கலைமாணவர்கள் அவதி*



யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணத்தில், சேர். பொன் இராமநாதன் வீதியில் தேங்கிக் கிடக்கும் குப்பையால்அங்குபெரும் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதுஎன்றுசுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துக்கு முன்பாக உள்ள குறித்த பகுதியில் மிகநீண்டநாள்களாகவே குப்பை தேங்கி காணப்படுகின்றது.

மக்கள் அதிகமாக செறிந்து வாழுவதுடன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியன அமைந்திருக்கும் பகுதியாகவும் அந்த இடம் உள்ள நிலையில் அங்கு தேங்கிக்கிடக்கும்குப்பைகள்பொதுமக்களையும், மாணவர்களையும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்குகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்தபகுதியில்குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபையால் அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ள போதும், பொது மக்கள் இரவு நேரங்களில் பொறுப்பற்ற வகையில்அங்குவந்துகுப்பைகளை கொட்டுகின்றார்கள்என்றும்பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் எடுத்து, அங்கு தேங்கி கிடக்கும் குப்பைகளை அகற்றி அங்கு ஏற்பட்டுள்ள சுகாதாரச் சீர்கேட்டை முடிவுக்கு கொண்டு வருமாறு மாணவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி1)



# வரணி பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வுகள்

கொடிகாமம், நவ. 26

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தின்தேசியவாசிப்புமாதநிகழ்வுகள்நேற்றுமுன்தினம் வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் இடம்பெற்றன.

வரணி பொது நூலக அபிவிருத்தி ஆலோசனை சபையின்ஒழுங்கமைப்பில்சாவகச்சேரிபிரதேசசபைத் தவிசாளர் க. வாமதேவன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தீவக வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. ஜெகன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மு. ஆனந்தராசா, ஓய்வு பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகபதவிநிலைதொழில்நுட்ப அலுவலகர் கி. கமலேஸ்வரன்உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பொது நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் நடுவராக பணியாற்றிய 20பேருக்குநூலகசேவையாளர்விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்துக்கு நூலக சேவைக்கான விருது வழங்கப்பட்டது

அத்துடன் போட்டிகளில் பங்கு பற்றி 75 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்ற 26 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து மதிப்பளிக்கப்பட்டது.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற 93 மாணவர்களுக்குச்சான்றிதழ்வழங்கப்பட்டது. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-159)

# டெங்கு ஒழிப்புவேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் கொட்டடியில்உள்ளமுத்தமிழ்கிராமத்தில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் மாநகர சபை பிரதி முதல்வர் து. ஈசன்தலைமையில்இடம் பெற்றது.

இந்தப்பிரதேசத்தில் இது வரை25பேர்டெங்குநோய் தொற்றுக்குள்ளானதாக இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமைவிழிப்புணர்வுடன் கூடிய துப்புரவுப் பணியை மேற்கொண்டு கழிவுப்பொருள்கள் அகற்றப்பட்டன. துப்புரவுப் பணிகளில் பிரதேச மக்களுடன், குறிப்பாக கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் சங்கம், பிரதேச விளையாட்டு அமைப்புகள், சனசமூக நிலையங்கள் ஆகிய அமைப்புக்களின் உதவியுடன் மாநகர பொதுச்சுகாதார அலுவலர்மாநகர ஆணையாளர் மற்றும் மாநகர சபை சுகாதாரப்பணியாளர்கள்உட்படபலர் ஈடுபட்டதாக பிரதி முதல்வர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-104)





# கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்தத்திருவிழா

வவுனியா, நவ. 26

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கிறிஸ்து அரசர் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுமுன்தினம் அமலமரித்தியாகிகள் சபையின்பிரதானிஅருட்பணிபோல் நட்சத்திரம் தலைமையில் இடம்பெற்றது.

கடந்தவெள்ளிக்கிழமைமாலைகொடியேற்றத்துடன்ஆரம்பமான திருவிழா சனிக்கிழமை வெஸ்பர் திருவிழா நற்கருணைவழிபாடுஇடம்பெற்றுநேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமைகாலை7மணிக்குதிருவிழாகூட்டுத்திருப்பலி இடம்பெற்று திருச்சொரூப பவணியுடன் நிறைவுற்றது.

ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன், அருட்பணியாளர்கள், அருட்சகோதரரிகள் பங்கு மக்கள், அயல் பங்கு மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு கிறிஸ்து அரசரின் அருளாசிகளைப் பெற்றுக்கொண்டனர். (ஐ)

# பிரச்சினைகள் தோன்றலாம் அவை தீர்க்கப்பட வேண்டும்

## மன்னார் ஆயரின் விருப்பம் இது

மன்னார், நவ. 26

மன்னார் மாந்தை, திருக்கேதீச்சரம் வளைவு சம்பந்தமாக ஊடகங்கள் எதையும் வெளியிடலாம். இந்தப் பிரச்சினையை ஒரு பெரும் பிரச்சினையென சித்த ரித்து காட்டலாம். ஆனால் நாம் மதங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனையிலேயே செயல்பட்டு வருகின்றோம். எந்தப் பிரச் சினைகள் தோன்றினாலும் அவை தீர்க்கப்பட்டு சமயங்களுக்கிடையே நல் லிணக்கம் மலர வேண்டும் என நாம் அனைவரும் ஒன்றித்து இறைவனிடம் வேண்டுவோம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர் னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்டத்தில் வரு டந்தோறும் நடைபெற்றுவரும் அருட்பணி திட்டமிடல் மாநாடு கடந்த 21ஆம் திகதி முதல் மூன்று தினங்களாக மன்னார் மறைமாவட் டத்தின் குடும்ப பொதுநிலையின ரின் அருட்பணி மையத்தில் மாநாட் டுச் செயலர் அருட்பணி ப.பி.டெஸ் மன் குலாஸ் அடிகளார் தலைமை யில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டின் இறுதிநாளில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் எந்த பங்கில் இருந்தாலும் அவர்கள் துன்பத் துக்கு உள்ளாகும்போது நாம் அனை வரும் ஒன்றித்து கைகொடுத்து உதவ வேண்டும். மாந்தை, திருக் கேதீச்சரம் பிரச்சினை விடயமாக இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

அப்பகுதி மக்கள் பல துன்பங்க ளுக்கு உள்ளாகி இருக்கும் போது அவர்களின் துன்பத்தில் நாமும் அவர்களுடன் இரண்டறக்கலக்க வேண்டும். ஊடகங்கள் எதையும் வெளியிடலாம். இப்பிரச்சினையை ஒரு பெரும் பிரச்சினையென சித்த ரித்துக் காட்டலாம். ஆனால் நாம் மதங்களுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனை யிலேயே செயல்பட்டு வருகின்றோம். மாந்தை திருக்கேதீச்சரம் வளைவு சம்பந்தமாக நாங்கள் அருட்பணி யாளர்கள் கொண்ட ஒரு குழுவாகச் சென்று ஆறு முறை அவர்களைச் சந்தித்துள்ளோம். இறுதியாக இடம் பெற்ற இந்த விடயம் தொடர்பில் நாங்கள் அவர்களுக்கு குறிப்பிட்ட இடமொன்றை காண்பித்தவேளை யில் தாங்கள் பிறகு வந்து தெரிவிக் கின்றோம் என தெரிவித்து சென் றார்கள். அதன்பின்பு எவ்விதபதிலும் எமக்கு அவர்கள் தெரிவிக்கவில்லை. இருந்தபோதும் நாங்கள் ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக தொடர்ந்து எங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இவ் விடயம் தற்பொழுது நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றபோதும் சமயங்களுக்கிடையே நல்லிணக் கத்தை கவனத்தில் கொண்டு நாங் கள் சுமுகமாக தீர்ப்பதிலேயே எங் கள் கவனத்தைச் செலுத்தி வரு கின்றோம்.

இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு சம யங்களுக்கிடையே நல்லிணக்கம் மலர வேண்டும் என நாம் அனைவ ரும் ஒன்றித்து இறைவனிடம் வேண்டு வோம். இது இவ்வாறு இருக்க திருச் சபை சட்டத்தின்படி எமது மறைமா வட்டத்தில் அருட்பணி பேரவை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்காக நாங்கள் பலவிதத்திலும் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றோம். இது புதிதான தொன் றல்ல. ஏற்கனவே இது அமைக்கப் பட்டதொன்றாகும் - என்றார். (ம)



## கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவுதினம் கடைப்பிடிப்பு



வவுனியா, நவ. 26

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் சிறந்த கூட்டுறவாளராக சேவையாற்றியவரு மான சு.வீரசிங்கத்தின் 21ஆவது நினைவு தினம் வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங் கத்தின் தலைமையலுவலகத்தில் நேற்று கடைப்பிடிக் கப்பட்டது.

நிகழ்வில் கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச்சங்கத்தின் அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆயு தக் குழுவால் வீரசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம- 23)

## முருங்கை, கடலைச் செய்கையை நாசமாக்கி வருகின்றன குரங்குகள்

### தென்மராட்சியில் 4 வருடங்களாக இதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை என்று விசனம்

யாழ்ப்பாணம், நவ. 26

தென்மராட்சியில் முருங்கை, கடலைச் செய்கையை விவசாயிகள் கைவிடும் அவலம் நிகழ்கின்றது. குரங் குகள் அந்தப் பயிர்களை நாசமாக்கிவருகின்றமையே இதற்குக் காரணம். குரங்குகளைக் கட்டுப்படுத்துமாறு 5 ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் இதுவரை தீர்வு கிட்டவில்லை என்று விவசாய அமைப்பு ஒன்று விசனம் தெரிவித்தது.

இலகுவில் வருமானத்தை ஈட்டக்கூடிய பயிர்ச் செய் கைக்கு உதவுமாறு பலமுறை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதும், மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக் காட்டியபோதும் எவற்றுக்குமே ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. எனவே தென்மராட்சிப் பகுதியில் நடமா டும் குரங்குகளை விரட்டி அந்தப் பகுதி விவசாயிகளின் வாழ்வியலுக்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர். (கு-105)



## மாணவர்கள்மதிப்பளிப்பு

தேசியசேமிப்புவங்கியின் சாவகச்சேரிகிளையில்ஹப் பன் கணக்கு வைத்துள்ள கடந்த 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சைக ளில் சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்பளிக்கப்ப டவுள்ளனர்.

இக்காலப்பகுதியில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் கள் தமது விவரங்களை வங்கியில் கையளிக்குமாறு கிளை முகாமையாளர் அ.கெங்காதரன் அறிவித்துள் ளார். (ஐ-9)

## அறநெறிப்பாடசாலை செயற்றிட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு,நவ.26

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட 67 பாடசாலைகளில் அற நெறிப்பாடசாலை செயற் றிட்டம் ஆரம்பித்துவைக் கப்பட்டது.

அறநெறிப்பாடசாலை களை வலுவூட்டும் நோக் கத்துடனும், அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக் கப்படாத இடங்களில் பாட சாலைகளை ஆரம்பிக் கும் நோக்கத்துடனும் இச்செயற்றிட்டம் முன் னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மேற்கு வல யக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரனின் வழிகாட்ட லின் கீழ், அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின்நிறுவுநர்அலை யப்போடி நல்லரெத்தினத் தின் நிதியுதவியுடன் இந்தச் செயற்றிட்டம் முன் னெடுக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு முனைக்காடு விவேகா னந்த மகா வித்தியால யத்தில், இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாட சாலை அதிபர் ஆ.அமிர் தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, மாணவர்க ளுக்கு கற்றல் உபகரணங் களும் வழங்கி வைக்கப் பட்டன. (ஐ)

# முல்லைத்தீவில் பத்துக்கும் மேற்பட்ட துயிலுமில்லங்களில் மாவீரர் நினைவு

## முழுமை பெறுகின்றன ஏற்பாடுகள்

முல்லைத்தீவு, நவ.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மு றையும் 10க்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்களில் மாவீரர் தினம் எழுச் சியாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக் காய் பிரதேசத்தில் உள்ள ஆலங் குளம்மாவீரர் துயிலும் இல்லம், மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வன்னிவிளாங்குளம் மாவீ ரர் துயிலும் இல்லம் ,கரைதுறைப் பற்று பிரதேசத்தில் உள்ள முள்ளி யவளை, அளம்பில் முள்ளிவாய்க் கால், கோடாலிக்கல்லு மாவீரர் துயிலும் இல்லங்களிலும், புதுக்கு டியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட இரணைப்பாலை, தேவிபுரம், தேராவில், மாவீரர் துயிலும் இல் லங்களிலும் மாவீரர் நாளினை நினைவிற்கொள்வதற்காக ஏற் பாட்டுக்குழுவினர் நிர்வகிக்கப்பட்டு மாவீரர் நாளினை நினை விற் கொள்வதற்கான தயார்படுத்தல்க ளில் ஈடுபட்டுள்ளார்கள்.

2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்மக்களின் விடுத லைக்காக விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து போராடிய போராளிகளில் களத்தில் உயிர் நீர்த்தவர்களுக்காக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் பல இடங் களிலும் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டன. அந்தத் துயி லும் இல்லங்களில் மாவீரர்களுடைய உறவினர்களால் நினைவு கூரப்பட் டனர். போருக்குப் பின்னர் அவ் வாறான பல துயிலும் இல்லங்கள் இடித்தழிக்கப்பட்டன. அந்த இடங் களில் இராணுவம் நிலை கொண் டிருந்தது. கடந்த ஆட்சிக் காலத் தில் மீண்டும் மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர். இந்த ஆண்டும் அவ்வாறு பேரெழுச்சியுடன் மாவீ ரர்கள் நினைவுகூரப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரி3)



## கிளி. இந்துக் கல்லூரி வெள்ளத்தில் மூழ்கியது

கிளிநொச்சி, நவ.26
கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் கடும் மழை காரணமாக, கிளிநொச்சி இந்துக்கல்லூரி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.


நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் ஆரம்பித்த மழையால், தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கிளிநொச்சி இந்துக்கல்லூரி வெள்ளத்தால் நிறைந்தது காணப்படுகின்றது பாடசாலையின் வளாகம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், 3 ஆம் தவணைப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதேவேளை உருத்திரபுரம் வீதியைக் குறுக்கெடுத்து வெள்ளம் அதிகளவு பாய்கின்றது. இதனால் போக்குவரத்து செய்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# முல்லைத்தீவில் தொடர் மழை

## தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில்

முல்லைத்தீவு,நவ.26
முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்ட மழை தொடர்ந்து பெய்வதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பல தாழ்நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. செப்பனிடப்படாத வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.



சில பாடசாலைகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது. இடையிடையே பெய்துவரும் கடும் மழையால் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குமுழமுனைப் பிரதேசத்தில் பாடசாலையின் மதில்சுவர் இடிந்து வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முள்ளியவளைப் பெருந்தெருஊடாக வழிந்தோடும் நீர் நந்திக் கடலைச் சென்றடையும் பாதையில், வற்றாப்பளை முதன்மை வீதியில் உள்ள பாலம் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால், பாலத்தை மூடி வெள்ளம் பாய்ந்துள்ளது. அதனால் பாலத்தால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீதியை மூடி வெள்ளம் பாய்ந்துள்ளதுடன், திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த பாலத்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த வீதியில் மக்களைக் கவனமாகப் பயணிக்க வைக்கும் நடவடிக்கையில் வீதி அபிவிருத்தி திணைக்களப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வீதியால் பேருந்துகள் செல்லமுடியாத நிலையில் வற்றாப்பளை, கேப்பாபிலவுக்குச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். மழை தொடர்ந்தும் நீடிக்குமாக இருந்தால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-ரி3)

## சேவை நலன் பாராட்டு விழா

வவுனியா,நவ.26
கடந்த காலங்களில் வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றி பதவி உயர்வு பெற்று வேறு இடங்களுக்கு இடமாற்றம் சென்றவர்களுக்கான பாராட்டு விழா வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், இணைந்து ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா, வவுனியா காமினி மகா வித்தியாலயத்திலுள்ள முதன்மை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கதாநாயகர்கள் நினைச் சின்னங்களும், பரிசில்களும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

வடமாகாண உதவிக்கல்விப் பணிப்பாளராக (உடற்கல்வி) கடமையாற்றும் இராஜசீலன், வவுனியா தெற்குக்கல்விபணிமனையின்வளவாளர்(உடற்கல்வி) ஜனாப் சுபைர், மீறிகம வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராக(உடற்கல்வி) கடமையாற்றும் சுபசிங்க ஆகியோர் நிகழ்வில்.மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஸ்ணன், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்று விப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (க-ரி4)





## படையினரின் நடைபயணம் பரந்தனைச் சென்றடைந்தது

கிளிநொச்சி,நவ.26
யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் நோக்கி படையினர் இருவர் மேற்கொண்டுள்ள நடைபயணம் நேற்று பரந்தனைச் சென்றடைந்தது.

யாழ்ப்பாணம் நைனாதீவில் அமைந்துள்ள நாகவிகாரையில் ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம், இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை உண்டு பண்ணும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் நாளான நேற்று பரந்தனில் நிறைவடைந்த நிலையில், மூன்றாம் நாள் பயணம் பரந்தனில் இருந்து வவுனியா நோக்கி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் வகையில் இந்தப் பயணம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கின்றோம்.

நாட்டின் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ள அரச தலைவர், நாட்டில் உள்ள அனைத்து இனங்களையும் சமாதானத்துடன் வாழும் வகையில் செயற்படுவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. .

அந்த வகையில் அனைத்த இன, மத மக்களும் சாமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ்வதற்காகப் பிரார்த்திப்போம்" என்று நடைப்பயணத்தில் ஈடுபட்டுள்ள படையினர் தெரிவித்தனர். (க-6)

## மின்சார சபை ஊழியர்கள் மீது தாக்குதல்; சந்தேகநபர்களுக்கு மறியல் நீடிப்பு

வவுனியா, நவ. 26
மின்சார சபை ஊழியர்களைத் தாக்கினர் என்று தெரிவித்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். நாளையதினம் அவர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வவுனியா ஆச்சிபுரம் பகுதிக்கு தொழில் நிமிர்த்தம் சென்ற மின்சார சபை ஊழியர்கள் மீது அங்கிருந்த ஒரு குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தாக்குதலில் ஆறு மின்சார சபை ஊழியர்கள் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஆச்சிபுரம் மக்களுக்கான மின்சார இணைப்புக்கள் வழங்கப்படாமல் அங்குள்ள மக்கள் இரண்டு தினங்களாக அவலை நிலைக்குள்ளாகியிருந்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டங்களையும் மேற்கொண்டனர்.

தாக்குதலுக்கு தலைமை வகித்தவராக தெரிவிக்கபடுபவரைக் கைது செய்யுமாறு கோரி வவுனியா.பூங்கா வீதியிலுள்ள மின்சார சபை அலுவலகத்தின் முன்பாக மின்சார சபை ஊழியர்களால் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் சிலரைக் கைது செய்தனர்.

முதன்மை சந்தேக நபர் நீதிமன்றில் சரணடைந்தார். மின்சார சபை ஊழியர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு பணிக்குத்திரும்பியிருந்தனர்.

முதன்மை சந்தேகநபர் என்று தெரிவிக்கப்பட்டவர் உட்பட 16 பேரை கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

அவர்கள் கடந்த 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 19ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நாளை 27ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கும் மன்று உத்தரவிட்டது. (ஐ)

# தற்போதைய அரசியல் சூழலில் எதையும் செய்யமுடியவில்லை

## இந்தியா பக்கபலமாக இருப்பது மனஆறுதலே கூட்டமைப்பின் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு



கொடிகாமம், நவ. 26

தற்போதைய அரசியலில் எதையும் செய்யமுடியாத நிலையே காணப்படுகின்றது. அப்படியிருந்தும் மனம் கூறுகிறது, இந்தியா பக்கபலமாக, உதவியாக இருக்கும் என்று. அண்மையில் இலங்கைக்கு வந்துசென்ற அயலுறவு அமைச்சரும் அதைக்கூறிச் சென்றிருக்கின்றார். தற்போது இந்திய அரசின் நெருக்குவாரங்கள் இந்த அரசை ஓரளவு சரிப்படுத்தும் என்று நினைக்கின்றேன் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.



உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில், தென்மராட்சி மழலைகளின் 'சிறுவர் மகிழ்களம்' சிறப்பு நிகழ்வு சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்வு உங்கள் பிள்ளைகளின் நிகழ்வு. நாங்கள் சந்தர்ப்பத்தை உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். இப்படி ஒரு நிகழ்வில் என்னென்ன திறமைகளை வெளிக்காட்ட முடியுமோ ஆசிரியர்கள் ஊடாக அவை வெளிக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**முன்பள்ளி ஆசிரியர்களுடன் பெற்றோர் இணைந்து செயற்படுங்கள்**

சிறுவர்களை வளப்படுத்தி உயர்வடையச் செய்வதென்பது மிகவும் கடினமானது. ஆசிரியர்கள் மிகக் கவனமாக அத்தனை பிள்ளைகளையும் சரியான முறையில் வளர்த்துக் கையளிக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளின் அறிவு, ஆற்றல், திறமை என்பன அவர்களை வழிப்படுத்தும். அவர்களே பிள்ளைகளை பாடசாலைக்குச் செல்லக் கூடியவாறு நெறிப்படுத்தி அனுப்புகின்றார்கள். முன்பள்ளி ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் இணைந்து செயற்பட வேண்டும். சிறு வயதிலிருந்தே பிள்ளைகளை வழிப்படுத்திக்கொண்டு செல்லவேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு என்ன திறமை இருக்கிறதோ அதை சிறுவயதிலிருந்தே ஊக்குவியுங்கள். அதனூடாக எங்களுக்கும் பெருமை பாடசாலைக்கும் பெருமை. அப்படியான பிள்ளைகளே சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக வளர்வார்கள்.

**இந்தியா பேருதவி**

கல்வியாகட்டும் போக்குவரத்தாகட்டும் வானூர்தி நிலையமாகட்டும் கூடுதலான அபிவிருத்திகளை எமது அண்மை நாடான இந்தியா கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூணைத்தூதரக கொன்சியூலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருக்கின்றார். நான் அண்மையில் வானூர்தி நிலையத் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தேன். வரும் வானூர்திகள் அங்கிருந்துதான் வருகின்றன. இலங்கையிலிருந்து அங்கு செல்லவில்லை.

நாங்கள் பல வழிகளில் முன்னேறுவதற்கு வடக்கு மாகாணத்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள தொடர்புகள் மிக நெருக்கமாக வந்திருக்கின்றன. விளையாட்டு, கல்வி, சுகாதாரம் என்று எவையாக இருப்பினும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தலைமன்னாரிலிருந்து சாதாரணமாகப் போகக்கூடிய வழிகள் ஏற்படுமாக இருந்தால் நிச்சயமாக எமது தொடர்புகள் வலுவடையும்.

கல்வியோடு சம்பந்தமான பலவிதமான முன்னேற்றங்களை நான் காண்கிறேன். பொருத்தமானவரைத் தான் முதன்மை அதிதியாக அழைத்திருக்கின்றோம். எந்த விடயத்தை எடுத்தாலும் மிகச் சுலபமாக அணுகக் கூடியவர் எதையும் யதார்த்தமாகப் புரிந்துகொள்ளக் கூடியவர் எமக்கு அனுசரணை வழங்குவார்.

**எது தேவையோ அதைக் காட்டியுள்ளோம்**

நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம், எங்களுக்கு என்ன தேவை என்பதை வடக்கு கிழக்கு இணைந்து 'ஒரே நேரத்தில் காட்டியிருக்கின்றோம். அதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அதை செய்வார்கள் என்று நினைக்கின்றேன்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், எங்களுக்காக அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய ஒரே நாடு அண்டை நாடான இந்தியாதான். அதைத்தான் நாங்கள் நம்பியிருக்கின்றோம். தற்போது பல அபிவிருத்திகள் நடக்கின்றன. மேலும் பல அபிவிருத்திகள் நடக்கவுள்ளன. - என்றார்.

'மகிழ்களம்' நிகழ்வில் சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தனர். மிகச் சிறப்பாக நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறார்களின் பல வகைப்பட்ட நிகழ்வுகளும் அரங்கை அலங்கரித்திருந்தன. தென்மராட்சி முழுவதுக்குமான சிறுவர் மகிழ் களம் என்பதால் சிறார்களின், பெற்றோர்களின் எண்ணிக்கைக்கும் சிறார்களின் நிகழ்வுகளுக்கும் குறைவிருக்கவில்லை. மதியம் சுமார் 2 மணிக்கு ஆரம்பித்த இந்த நிகழ்வு இரவு வரை நீடித்திருந்தது. நிகழ்வுகளில் பங்கேற்ற சிறார்கள் ஒவ்வொருவருக்கும் நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டு அவர்கள் மதிப்பளித்து உற்சாகப்படுத்தப் பட்டனர்.

(து-159)

# நாட்டுக்கு ஆசி வேண்டி வற்றாப்பளையில் வழிபாடு

முல்லைத்தீவு,நவ.26

புதிதாக தலைமை ஏற்றுள்ள அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் ஆட்சி சிறக்க, ஆசி வேண்டி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பொங்கல் வழிபாடு நேற்று இடம்பெற்றது.

மன்னாகண்டலைச் சேர்ந்த தயாபரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கல் மற்றும் சிறப்புப் பூசை வழிபாடுகளில் இலங்கைப் பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினரும், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ச.கனகரத்தினம் மற்றும் கட்சியின் தொண்டர்கள், பிரதேச மட்ட இணைப்பாளர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச இணைப்பாளர்கள் எனப் பலர் கொண்டனர்.

"முல்லைத்தீவு மாவட்ட மக்கள் நிம்மதியாகவும் நல்லவர்களாகவும் வாழவேண்டும் என்பதற்காக எமது வாழ்த்துச் செய்தியை அரச தலைவர், தலைமை அமைச்சருக்குத் தெரியப்படுத்துகின்றோம். இலங்கையில் உள்ள அனைவரும் ஆசி பெற வேண்டும். இந்த அரசை சிறப்புடன் புதிய தலைவர்கள் நடத்த வேண்டும்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தெரிவித்தார்.

(க-ரி3)

# நினைவு தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,நவ.26

வட இலங்கைப் பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 30 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டமும், தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் "வெற்றிக்கு வலிகள் தேவை" என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் வேம்படி வீதியில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறும்.

சட்டத்தரணி தோழர் சோ. தேவராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ம. திருவரங்கன், நூல் அறிமுகத்தை கொழும்பு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பைச் சேர்ந்த தோழர் மு. மயூரன், கருத்துரையை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல், ஏற்புரையை தோழர் வள்ளியம்மை சுப்பிரமணியம் ஆகியோர் ஆற்றுவர்.

(க)

# தமிழரின் அடையாளத்தை நிறுவியோர் மாவீரர்களே

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 26

தமிழர்களுக்கான தனித்துவ அடையாளத்தை இந்த பூமிப்பந்தில் நிறுவியவர்கள் மாவீரர்களே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.





தாயக விடுதலைப் போரில் உயிர் நீத்த் போராளிகளின் பெற்றோரை மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி பளையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கலந்துகொண்டிருந்தார். பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பொது உருவப் படத்துக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் தாயக விடுதலைப்போரில் உயிரிழந்த வீரர்களுக்காக அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவீரர்களின் பெற்றோர் நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. அதில் உரையாற்றுகையில் சிறிதரன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் இந்த நாட்டில் விடுதலை வேண்டி எழுபது ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி வருகின்றோம். எங்களுடைய விடுதலை ப்போராட்டத்தை உலகமே வியக்கும் அளவுக்குக் கொண்டு சென்ற புனிதர்கள் மாவீரத்தெய்வங்களே. அவர்களை ஈன்றெடுத்த பெற்றோர்கள் என்றுமே பூசிக்கப்பட வேண்டியவர்கள், மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள்.

சுயநலம் மிக்க இந்த உலகத்திலே நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக அடிமைத்தனமற்று வாழவேண்டும் என்பதற்காகத் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கிய மாசற்ற மறவர்கள் மாவீரர்கள். எந்தவொரு இராணுவமும் விடுதலை இயக்கமும் செய்திராத தியாகங்களையும் சாதனைகளையும் எங்கள் மாவீரர்கள் செய்திருக்கிறார்கள். எமது இனத்தின் இன்றைய நிமிர்வுகளுக்கும் சாதனைகளுக்கும் அச்சாணிகளாகவும் எமது இனத்தை என்றும் வழிநடத்தும் தெய்வங்கள் மாவீர்களே. என்றார்

(து-6)

---

# ஒளிப்படக் கண்காட்சியில் 240 படங்கள் பார்வைக்கு



யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒளிப்படக் கண்காட்சியில் சுமார் 240 க்கும் மேற்பட்ட ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணம் ஒளிப்படக் கலைஞர்கள் சமூகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தந்தை செல்வா கலையரங்கில் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது. மனித வாழ்க்கையின் அன்றாட செயற்பாடுகளை வெளிப்படுத்திய ஒளிப்படங்கள் கறுப்பு வெள்ளை, வண்ணங்களாக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கண்காட்சியை அதிகமானவர்கள் பார்வையிட்டுச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் உள்ள சுமார் 50 க்கும் அதிகமான கலைஞர்களின் 240 க்கும் மேற்பட்ட ஒளிப்படங்களைக் கண்காட்சிக்கு வைத்திருந்தனர். தொடர்ச்சியாக 4 நாள்கள் நடைபெற்ற கண்காட்சி சிறப்பாக நடைபெற்று நேற்றுடன் நிறைவடைந்தது. (க-7)

---

# டெங்கு ஒழிப்பு வாரம் நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ 26

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளை புதன் கிழமை முதல் சிறப்பு டெங்கு ஒழிப்பு வாரம் கடைபிடிக்கப்படும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், நவம்பர் 27 ஆம் திகதி முதல் ஆறு மாவட்டங்களில் சிறப்பு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கொழும்பு, கம்பாஹா, மாத்தளை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இந்த சிறப்பு டெங்கு ஒழிப்பு வேலை திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சிறப்பு டெங்கு ஒழிப்பு வாரத்தில் விழிப்பு ணர்வு நடவடிக்கைகள், கள தரிசிப்புகள் என்பன இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

---

# வவுனியாவில் சில வீதிகள் சீரமைப்பு

வவுனியா, நவ. 26

வவுனியாவிலிருந்து பறயனாளங்குளம் வரையான மன்னார் வீதி மற்றும் பூவரசம் குளத்திலிருந்து செட்டிகுளம் மற்றும் நெளுக்குளம் நெரிய குளம்செல்லும்முதன்மை வீதிகள் விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதானி தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இணைக்கப்பட்ட வீதிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 343 வீதிகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவற்றின் சீரமைப்புப் பணிகள் இரண்டு வருடங்களில் முடிவுறும் வகையில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ள.

(து)

---

*சிறுபான்மை இனங்கள் பிரிந்துநிற்காமல்*

# சகல கட்சியினருமே இணைந்து அரசுடன் பேச்சு நடத்தவேண்டும்

## *மாகாண முன்னாள் உறுப்பினர் வலியுறுத்து*

வவுனியா,நவ. 26

சிறுபான்மை இனமான நாங்கள் பிரிந்து நிற்காமல் எங்களுடைய எதிர்பார்ப்புக்கள், பிரச்சினை கள் தொடர்பாக, அனைத்துக் கட்சிகளும் இணைந்து அரசுடன் பேச்சு நடத்தவேண்டிய தேவையை அரச தலைவர் தேர்தல் உணர்த்தியுள்ளது என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் சிறுபான்மை இனமாக இருக்கிறோம். போர் முடிவடைந்த பின்னர் எமக்கான அதிகாரப்பகிர்வை அல்லது ஏதாவது ஒரு தீர்வை இந்த நாட்டை ஆழ்கின்றவர்கள் தருவார்கள் என்று நித்தமும் ஏங்கிக்கொண்டிருக்கிறோம்.

எமது பிரச்சினையைத் தீர்க்கும் வகையிலானவர்களாக இங்கு இருக்கிற ஆட்சியாளர்கள் யாரும் இல்லை.

2009க்குப் பின்னர் தமிழ் மக்களுக்கான தலைமை வெற்றிடமாகவே காணப்படுகின்றது. எனவே சிறுபான்மை இனமான நாங்கள் பிரிந்து நிற்காமல் எங்களுடைய எதிர்பார்ப்புக்கள், பிரச்சினைகள் தொடர்பாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகப் பயணித்தே அரசுடன் பேச்சு நடத்தவேண்டிய தேவையையும், தமிழ் முஸ்லிம் மக்களுக்குத் தீர்வு கொடுக்கும் நிலையில் பெரும்பான்மைச் சமூகம் இல்லை என்பதையும் கடந்த தேர்தல் உணர்த்திநிற்கின்றது.

சிறுபான்மைத் தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கின்றனர் என்று இனவாதம் பரப்பப்பட்டுள்ளது. இது சிங்கள பௌத்த நாடு, எங்களை நாங்களே ஆளவேண்டும் என்று பரப்புரை செய்யப்பட்டதனாலேயே பெரும்பான்மை மக்கள் அதிகளவானோர் கோத்தபாயவுக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எங்களுடைய கோரிக்கையை செவிமடுப்பதாக இல்லை.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் தமிழ் மக்களின் நலன் கருதி இந்த அரசுடன் நிச்சயம் பேசுவார்கள். புதிய அரசு தமிழ் மக்களின் பிரச்சினை களைச் செவிமடுக்க வேண்டும். அதற்கான அழுத்தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் பிரயோகிக்கவேண்டும். என்றார்.

(து-110)

---



வீதி, பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சரான ஜோன்ஸ்டன் பர்னாந்து நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் செயலாளர் அத்மிரால் சிறிமெவான் ரணசிங்க , நாடாளுமன்ற உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே, தாரானாத் பஸ்நாயக்க மற்றும் அருந்திக்க பர்னாந்து , இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ பணிப்பாளர் கப்டன் அத்துல ஹேவாவித்தாரன உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள், துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (க)

# ராஜாங்க அமைச்சர் நியமனம் ராஜபக்சாக்களுக்குள் மோதல்

## நாளை வரை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 26

புதிய இராஜாங்க அமைச்சர்களுக்கான நியமனம் மற்றும் அவர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்று நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டபோதும் அது நாளை புதன் கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ராஜபக்சாக்களுக்கு இந்த விடயத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராஜாங்க அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்வு நேற்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. 20 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும், இவர்கள் பிரதி அமைச்சருக்கு மேலான அதிகாரங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டது. எனினும், இந்தப் பதவியேற்பு நிகழ்வு நேற்று நடைபெறவில்லை. நாளை புதன் கிழமையே நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் 16 அமைச்சர்களை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச நியமித்திருந்தார். இதன்போது, அவர் அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

இராஜாங்க அமைச்சர்களைத் தெரிவு செய்வதிலும் கடுமையான நெருக்கடிகளை அரசு எதிர்கொண்டிருப்பதாக கூறப்படுகிறது. (ஒ.5)

# ஷானி அபேசேகரவை கைது செய்யவும்!

## மேஜர் அஜித் கோரிக்கை

கொழும்பு, நவ. 26

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை கைது செய்ய வேண்டும் என்று தாய் நாட்டுக்கான இராணுவ அமைப்பின் இணைப்பாளர் மேஜர் அஜித் பிரசன்ன கோரிக்கை விடுத்துள்ளார். பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள ஷானி அபேசேகர, நாட்டிலிருந்து தப்பிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுடன் விசாரணைகளை மேற்கொண்ட பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா நேற்றுமுன்தினம் தமது குடும்பத்தாருடன் இரகசியமாக சுவிர்ஸலாந்துக்கு தப்பிச் சென்றுள்ள்ார். அவர் ஷானி அபேசேகரவின் ஆலோனைக்கமைய சர்சைக்குரிய பல சம்பங்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

அத்துடன் அவர்களுக்கு எதிராக பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள தருணத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொ்லிஸ் பரிசோகர் நிசாந்த டி சில்வா இரகசியமாக நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார். பொலிஸ் தலைமையகத்தின் அனுமதியின்றி அவர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவண் குணசேகர தெரிவித்துள்ளார். (ஒ.5)



நன்றி அவந்த ஆட்டிகல

# சுகாதார அமைச்சின் புதிய செயலர் அனுருத்த பாதெனிய?

கொழும்பு, நவ. 26

சுகாதார அமைச்சின் புதிய செயலராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் (ஜி.எம்.ஓ.ஏ) தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனியவின்பெயரும்பரிசீலனையில் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலராக தனது பெயரும் பரிசீலனையில் இருப்பதை அனுருத்த பாதெனியவும் செய்தி ஊடகங்களிடம் உறுதி செய்திருந்தார்.

கடந்த அரசின் காலத்தில், அடிக்கடி வேலை நிறுத்தங்களுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. அது அரசியல் நோக்கமுடையது என்று அப்போது விமர்சிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ராணுவப் பின்னணியுடையோருக்கு நியமனங்கள் வழங்கும் கோத்தபாய

கொழும்பு, நவ. 26

அரச தலைவர் செயலக தலைமை அதிகாரியாக, இராணுவத்தின் ஓய்வு பெற்ற அதிகாரியான மேஜர் ஜெனரல் கே.பி.எகொடவெல நியமிக்கப்பட்டுள்ளார். அரச தலைவர் செயலகப் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். 1971ஆம் ஆண்டு இராணுவத்தில்இணைந்து கொண்ட மேஜர் ஜெனரல் கே.பி.எகொடவெல, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தீவிர பங்காற்றியவர். ஆனையிறவுப் பெருந்தளம், 2000ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி கண்ட போது அதன் கட்டளை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் கே.பி.எகொடவெலவே பணியாற்றியிருந்தார்.

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், 2007ஆம் ஆண்டில் இருந்து, 2015 வரை, அவர் ரக்ன லங்கா பாதுகாப்பு சேவை நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# படங்களை நீக்குமாறு ராணுவத் தளபதி உத்தரவு!

கொழும்பு, நவ. 26

அனைத்து இராணுவ அலுவலகங்களிலும் வேறு எந்த உருவப்படங்களுக்குப் பதிலாக, அரச இலச்சினைகள் அல்லது இராணுவ இலச்சினைகள் உள்ள படங்களை மட்டும் காட்சிக்கு வைக்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உத்தரவிட்டுள்ளார். அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச பிறப்பித்த உத்தரவுக்கு அமைவாகவே இராணுவத் தளபதி நாட்டில் உள்ள அனைத்து இராணுவ அலுவலகங்களும் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ஒ.5)

# இலங்கையில் 20ஆண்டுகளுக்கு ராஜபக்சாக்களின் ஆட்சி தான்!

## ஆரூடம் கூறுகிறார் கம்மன்பில

கொழும்பு, நவ. 26

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச பெற்ற வெற்றியின் மூலமாக அடுத்த 20 ஆண்டுகளுக்கு ராஜபக்சாக்களின் ஆட்சியே நிலவும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவின் அமோக வெற்றியுடன் இந்த நாட்டில் புத்துணர்வும், மாற்றம் ஒன்றும் ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மை மக்களின் முழுமையான ஆதரவும், சிங்கள பௌத்த அடையாளமும் கிடைத்துள்ளது. சிறுபான்மை மக்களின் ஆதரவும் கிடைத்திருக்கும். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் திட்டமிட்டு சிறுபான்மை மக்களின் ஆதரவு கிடைக்காத வகையில் செயற்பட்டனர். எனினும் நாம் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் சகல மக்களையும் அரவணைத்து செல்லவே முயற்சிக்கின்றோம்.

இப்போது எமக்கு கிடைத்து வெற்றியின் மூலமாக அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ராஜபக்சாக்களின் அரசு தொடரும். நாம் செய்யும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள், வாழ்வாதார நகர்வுகள் மூலமாக மக்கள் அனைவரும் எமது ஆட்சியை கொண்டு செல்லவே ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இப்போது ஒரு அணியாக ஒன்றிணைந்து ஐக்கிய பயணம் ஒன்றினை முன்னெடுக்க வேண்டும்.

அதற்கான அழைப்பை இப்போதும் நாம் விடுக்கின்றோம். மேலும் அரச தலைவர் தேர்தல் வெற்றியுடன் உடனடியாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி எமக்கான அரசை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே நோக்கமாகும்.

அதற்கான எண்ணம் எம்மிடம் உள்ளதைப் போலவே பொதுத் தேர்தலை நடத்த ஐக்கிய தேசிய கட்சியும் முழுமையான ஒத்துழைப்பை எமக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஒ.5)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களுக்கு அடிபணியேன்

## கோத்தா திட்டவட்டமாகத் தெரிவிப்பு

அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களுக்கு நான் ஒருபோதும் அடிபணியமாட்டேன் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் பிக்குகள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர், எனக்கு மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆணையின் படியே நான் செயற்படுவேன். ஒரு நோக்கத்துக்காகவே என்னை மக்கள் தெரிவு செய்தனர். அவர்கள் விரும்பியதை நிறைவேற்றி வைக்க வேண்டும். சில அரச சார்பற்ற நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளுக்கமைய, குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் சிலர் விசாரணைகளை நடத்தினர், என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.5)

# அரசியல் பழிவாங்கல் வேண்டாம்; சட்ட ஆட்சியை நிலைநாட்டுங்கள்!

## கோத்தா, மகிந்த தலைமையிலான அரசிடம் ரணில் வலியுறுத்து



கொழும்பு, நவ. 26

நாட்டின் புதிய அரச தலைவரும், அவரின் சகோதரரினதும் தலைமையில் உருவாகியுள்ள புதிய அரசும் சட்ட ஆட்சிக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். அதைவிடுத்து அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுவதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

கடற்படையினருடன் தொடர்புடைய மாணவர்கள் கடத்தல், லசந்த விக்கிரமதுங்க கொலை, வசீம் தாஜுதீன் கொலை, மருத்துவர் சாபிக்கு எதிராக சுமத்தப்பட்ட கருக்கலைப்பு குற்றச்சாட்டு வழக்கு, உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட வழக்கு, கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வழக்கு உள்ளிட்ட முக்கிய வழக்குகளின் விசாரணைகளை நெறிப்படுத்தி நடத்திவந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஷனி அபயசேகர அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, அரச நிறுவனங்களில் பணிப்பாளர், தலைவர் பதவிகளில் திறம்படச் செயற்பட்டு வந்த பலரையும் இடமாற்றம் செய்யும் நடவடிக்கை மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசே மேற்படி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பன்னாட்டுச் செய்திச் சேவையொன்றின் கொழும்புச் செய்தியாளர் நேரில் வினவினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நல்லாட்சியில் பொறுப்பு வாய்ந்த அரச துறைகள் மற்றும் பிரிவுகளில் இருந்த பணிப்பாளர்கள். தலைவர்கள் எவ்வித அழுத்தங்களுமின்றி சுயாதீனமாகச் செயற்பட்டார்கள். அவர்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்தார்கள். சட்டத்தை மதித்து நீதியின் பிரகாரம் செயற்பட்டார்கள். நாட்டின் புலனாய்வுப் பிரிவும் நீதித்துறையும் எந்தவித மிரட்டல்களுமின்றி சுயமாக இயங்கியது. கடத்தல்காரர்கள், கொலைகாரர்கள், மோசடிக்காரர்கள் மற்றும் திருடர்கள் ஆகியோருக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனவே, நாட்டின் புதிய அரச தலைவரும், அவரின் சகோதரினதும் தலைமையில் உருவாகியுள்ள புதிய அரசும் சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். மக்கள் ஆணைக்கு மதிப்பளித்துச் செயற்பட வேண்டும். அதைவிடுத்து அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுவதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும். இல்லையெனில் இந்த ஆட்சியை ஜனநாயக ஆட்சி என எவரும் சொல்ல முடியாது. இதை அராஜக ஆட்சி என்றே சொல்லவேண்டி வரும் - என்றார்.

(ஒ.5.22)

# சொந்த வீட்டிலேயே தங்கியிருக்க போகும் அரச தலைவர் கோத்தா

கொழும்பு, நவ. 26

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச, தமது பதவிக்காலத்தில் அதிகாரபூர்வ வதிவிடமான, அரச தலைவர் மாளிகையிலோ அல்லது வேறு அரச வதிவிடங்களிலோ குடியேறுவதில்லை என்று முடிவு செய்துள்ளார்.

நுகேகொட, மீரிஹானவில் உள்ள தமது சொந்த வீட்டிலேயே, தொடர்ந்தும் தங்கியிருக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச விவகாரங்களை நிறைவேற்றுவற்கு மாத்திரமே, அரச தலைவர் மாளிகையை பயன்படுத்தப் போவதாகவும், வேறு எந்த அரச வதிவிடங்களும் தனக்கு தேவையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய அரச தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் செயலக ஆளணியை 2 ஆயிரத்து 500 இல் இருந்து 250 பேராக குறைக்க உத்தரவிட்டார். அத்துடன் தமது பாதுகாப்பு வாகன அணியின் எண்ணிக்கையைக் குறைக்குமாறும், பயணங்களின் போது வீதித்தடைகளை ஏற்படுத்தக் கூடாது என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# மழையுடனான காலநிலை தொடரும்



கொழும்பு, நவ. 26

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை தொடர்ந்தும் நீடிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட கிழக்குப் பருவப் பெயர்ச்சி மழை நிலமை படிப்படியாக உருவாகி வருகின்றதுடன், நாளையிலிருந்து நாடு முழுவதும் முழுமையாக அது பரவக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மழையுடனான வானிலை மேலும் தொடரும் சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென் மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் சில இடங்களிலும் 100 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீற்றர் அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களாலும் பலத்த காற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (ஒ.5.7)

# சி.ஐ.டியினர் 704பேர் நாட்டை விட்டு வெளியேறத் தடை

## நிசாந்த டி சில்வா சுவிஸில் தஞ்சம் புகுந்ததையடுத்து நடவடிக்கை



கொழும்பு, நவ. 26

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணியாற்றும் 704 பொலிஸ் உத்தியோகத்தர்களின் விவரம் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய குடிவரவு குடியகல்வு பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

704 பேரும் பொலிஸ் திணைக்களத்தின் அனுமதி பெறாது வெளிநாட்டுப் பயணங்களை முன்னெடுக்க அனுமதிக்க வேண்டாம் என்று பொலிஸ் தலைமையகத்தால் குடிவரவு, குடியகல்வுப் பிரிவிடம் கோரப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை, 11 இளைஞர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட நாட்டின் முக்கிய குற்றவியல் வழக்குகளின் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா, தனது குடும்பத்துடன் சுவிஸர்லாந்துக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் அனுமதி பெறாது வெளிநாடு பயணித்த அவர், தனது பாதுகாப்பு நலன் கருதி சுவிஸர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ளார்.

இந்த நிலையிலேயே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பணியாற்றும் 704 பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர் விவரம் அடங்கிய பட்டியல் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய குடிவரவு குடியகல்வு பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# வீதியில் செல்ல முடியாத நிலமை உருவாகின்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 26

புதிய அரசு ஆட்சி பீடத்திற்கு ஏறி ஒரு வார காலத்துக்குள் கட்சியொன்றின் தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வீதியில் செல்ல இடையூறு ஏன நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிசாட் பயணித்த வாகனத் தொடரணி மீது புத்தளம் முந்தல் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தாக்குதல் நடத்தப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'வீதியில் செல்ல முடியாதளவுக்கு கடும் மோசமான ஆட்சியொன்றே தற்போது பதவிக்கு வந்துள்ளது. இவ்வாறான தவறுகளை உடனடியாக திருத்திக் கொள்ளாத பட்சத்தில், நாடு தவறான வழியிலேயே செல்லும். மக்கள் விரைவில் இதற்கான பதிலை வழங்குவார்கள்' - என்றார் ரிசாட். (ஒ.5)

# மதத் தலைவர்கள் எவரும் அரசியல் செய்யக்கூடாது

## சிவமோகன் எம்.பி. வலியுறுத்துகிறார்



மன்னார், நவ. 26

சுமுகமான அரசியல் சூழல் உருவாகுவதற்கு மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடை செய்யவேண்டும் என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

மதத்தலைவர்கள் ஆன்மீக ரீதியில் மக்களை நெறிப்படுத்த வேண்டியவர்கள். அவர்கள் மக்களிடையே விரோதங்களை விதைத்து அரசியல் செய்ய முற்படுவது இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளது. அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றுக்குள் செயற்படும் விதம் புத்த மதத்துக்கு இழுக்காகக் காணப்படுகிறது. மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்காக இன்று ஒரு கட்சியிலும் நாளை வேறொரு கட்சியிலுமாக தனது நிலைப்பாட்டை எடுத்து வருகின்றார். இது அந்த மதத்துக்கே இழுக்காகக் காணப்படுகிறது. எனவே மத ரீதியில் மக்களைப் பிரித்து தங்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளப் புறப்படும் இப்படியான மதத்தலைவர்களால் நாட்டின் சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்கப்படுகிறது.

நல்லிணக்கத்துக்கு விரோதம் விளைவிக்கப்படுகிறது.

எனினும், மிகிந்தலை ரஜமகா விகாராதிபதியின் கருத்து வரவேற்கத்தக்கது.

அதாவது மதத்தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவது, அரசியல் கருத்தை கூறி மக்களைத் திசைதிருப்புவது போன்றவை தவிர்க்கப்பட்டால் இன,மத, நல்லிணக்கத்துக்கு உந்து சக்தியாக அமையும் என்பது அவருடைய கருத்து. அதையும் மீறி இன்று அரசியல் வங்குரோத்தில் உள்ளவர்கள்தான் மதத்தை வைத்துக் கொண்டு அரசியல் செய்ய முற்படுகின்றார்கள். இது நகைப்புக்குரிய விடயம்.

அதுமட்டுமல்லாது அரசியலின் நன்மை தீமைகளை அனுபவிக்கப் போகிறவர்கள் மக்கள். அதனால் மக்களின் கருத்துக்கள் சுய விருப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். ஒரு சில மதத்தலைவர்கள் அப்படியல்ல.

தனக்கும் தனது சுற்றத்தாருக்கும் சாதகமாக ஒருவர் வெறும் மதத்தின் மீது பற்றுக் கொண்டிருந்தால் அவரைத் தேர்தலில் நிறுத்தி அவரை வெற்றி பெறச் செய்யுமாறு மக்களை வற்புறுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மக்கள் சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடியவர்கள். இந்த நாட்டையும் பகுதிகளையும் யார் நிர்வகிக்க வேண்டும் என்று முடிவெடுக்கும் உரிமை பொதுமக்களுக்கே உரித்தானது. அதில் எவ்வகையிலும் மதத் தலைவர்கள் ஈடுபடக்கூடாது. அப்பொழுதுதான் அரசியலை மக்கள் புரிந்து கொள்ளும் சூழல் அமையும். நல்ல திறமையும் சாதுரியமும் மிக்க அரசியல் சூழலை உருவாக்க முடியும்- என்றார். (து- 213)

# அடுத்தவரிடம்கேட்ட கேள்வியை விடுத்து உங்களிடம் கேட்டதற்குப் பதிலளிக்கலாமே

## தவராசாவைச் சாடுகின்றார் ரவிகரன்

யாழ்ப்பாணம், நவ. 26

அடுத்தவரிடம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் தவராசா, தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்காதமை அந்த விடயம் தவறுதான் என்பதனை ஏற்றுக் கொள்கின்றாரா என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:

வாக்களித்த தமிழ் மக்களுக்கு சஜித் பிரேமதாச நன்றி தெரிவிக்கவில்லை என்பதைக் கண்டுபிடித்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா உள்ளிட்டவர்களை, புதிய அரசதலைவர் சிங்கள மக்களாக மாற்றிவிட்டார், அதற்கு வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் பதில் என்ன என்றும் கேள்வி எழுப்பியிருந்தேன்.

அரசதலைவர் தேர்தலில் இரு முதன்மை வேட்பாளர்கள் உட்பட 35 பேர் போட்டியிட்டனர். அதிலே தமிழ் மக்கள் ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையில் ஒருவருக்கு வாக்களித்தபோதும் அரசதலைவராகத் தெரிவானவரும் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் வாக்குகளிலிருந்தும் 75 ஆயிரம் வரையான வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இருந்தபோதும் சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவான அரசதலைவரென்று விழித்திருந்தார் என்று பத்திரிகைகள் கூறுகின்றன.

அவ்வாறானால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு போன்ற சிங்கள மக்கள் வாழாத மாவட்டங்களில் புதிய அரசதலைவருக்கு வாக்களித்த மக்கள் அனைவரும் சிங்கள மக்களாகவே அரசதலைவரால் கருதப்பட்டுள்ளனர்.

இதேபோன்று அரசதலைவராகப் பதவி ஏற்ற இடமும் துட்டகைமுனுவால் அமைக்கப்பட்ட ஆலயம் எனக் கூறுவதன் மூலம் றுகுணுவில் இருந்து வந்து தமிழ் மன்னனான எல்லாள மன்னனை வீழ்த்தியதை ஞாபகமூட்டுவதற்காகவே அதே றுகுணுவில் இருந்து வந்து எல்லாள மன்னனை அழித்த துட்டகைமுனுவால் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பதவியேற்றுக்கொண்டாரா என்றும் வரலாற்றியலாளர்களிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவை அனைத்தும் இவ்வாறிருக்க, இவை தொடர்பில் வாய் திறக்க தைரியமற்றவராகவோ அல்லது புதிய அரசதலைவர் கூறிய வரைவிலக்கணத்துக்குள் அகப்பட்டதனாலோ என்னவோ வாய் மூடி மௌனியாக இருக்கின்றார் தவராசா.

மாறாக 23ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தவராசாவின் கட்சித் தலைவர் தொடர்பில் கூறிய கூற்றுக்குத் தவராசா பதிலளித்துள்ளார்.

அவருடைய பதிலின் உள்ளக் கிடக்கைக்குள் நான் செல்ல விரும்ப வில்லை.

ஏனெனில் எவர் தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகின்றதோ அவரே பதிலளிக்க வேண்டும். ஆனால் தனது வினாவுக்குப் பதிலளிக்காமல் தனது தலைவர் தொடர்பான கருத்துக்கு மட்டும் விழுந்தடித்து அறிக்கை விட்டு தலைமை விசுவாசத்தைக் காண்பித்துள்ளார்- என்றார். (து-105)

# கோப்பாய், எள்ளன்குளத்தில் நாளை நினைவேந்தல்கள்

யாழ்ப்பாணம், நவ.26

யாழ்ப்பாணம் கோப்பாய் துயிலுமில்ல வணக்க நிகழ்வுகளும், வடமராட்சி எள்ளன்குளம் வணக்க நிகழ்வுகளும் நாளை நடைபெறும் என்று நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கோப்பாய் துயிலுமில்ல வணக்க நிகழ்வுகள் துயிலுமில்லம் அமைந்துள்ள இடத்துக்கு அண்மையில் இராச வீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு இடத்தில் நாளை மாலை நடைபெறும் என்றும், அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி, எள்ளள்குளத்தில் வணக்க நிகழ்வுகள் பருத்தித்துறை முனைப் பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறப்பு இடத்தில் (முனை வெளிச்ச வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்தில்) நாளை மாலை நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலை 6.05 மணிக்கு சுடரேற்றலுடன் நினை வேந்தல் ஆரம்பமாகும். மாலை 5 மணிக்குப் பொதுமக்கள் அனைவரும் நினை வேந்தல் இடத்தில் ஒன்று கூட வேண்டும் என்று ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (எ-26)

# நிசாந்த டி சில்வா மீது ஒழுக்காற்று நடவடிக்கையாம்

கொழும்பு, நவ. 26

குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமை விசாரணை அதிகாரி நிசாந்தா டி சில்வா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ அனுமதியில்லாமல் அவர் வெளிநாடு சென்றதாக தகவல் வந்துள்ளது. நிசாந்தா டி சில்வா வெளிநாடு சென்றாரா என்பதை குடிவரவு மற்றும் குடிவரவு துறை உறுதிப்படுத்தும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர.

எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் வெளிநாடு செல்வதானால், பாதுகாப்பு அமைச்சின் செயலரின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாகும். இருப்பினும், தலைமை விசாரணை அதிகாரி நிசாந்த டி சில்வா வெளிநாடு செல்ல எந்த ஒப்புதலும் பெறவில்லை. இது கடுமையான ஒழுங்கு மீறல் நடவடிக்கை. அவர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் கீழ், விசாரணைக்கு தலைமை தாங்கிய தலைமை விசாரணை அதிகாரி நிசாந்த டி சில்வா நேற்றுமுன்தினம் சுவிஸர்லாந்து சென்றுள்ளார்.

மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் நேற்று முன்தினம் பகல் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளார்.

11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கியமை, பத்திரிகையாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை மற்றும் பத்திரிகையாளர் கீத் நொயரை கடத்தி தாக்கியது உள்ளிட்ட பல சர்ச்சைக்குரிய சம்பவங்கள் குறித்து விசாரணை இவர் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# மத்திய வங்கி ஆளுநர் டிசெ. 20இல் பதவி விலகல்

கொழும்பு, நவ. 26

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, அடுத்த மாதம் 20ஆம் திகதி தனது பதவிவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இந்தத் தகவலை கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ளது.

பிணைமுறி மோசடி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட அர்ஜுன் மகேந்திரன் பதவி நீக்கப்பட்ட நிலையில் 2016ஆம் ஆண்டு ஜுலையில் மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசாமி நியமிக்கப்பட்டார்.

2017ஆம் ஆண்டில் தெற்காசியாவின் சிறந்த மத்திய வங்கியின் ஆளுநர் என்ற மதிப்பை கலாநிதி இந்திரஜித் குமார சாமிக்கு குளோபல் கபிடல் மார்க்கெட் சஞ்சிகை அறிவித்திருந்தது. அத்துடன், கலாநிதி இந்திரஜித் குமாரசாமி, தாய்நாட்டிற்காக வழங்கிய மிகச் சிறந்த மற்றும் விலைமதிப்பற்ற சேவைக்காக முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த ஓகஸ்ட் மாதம் மதிப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

### சிங்கள மக்களின் மனங்களை வென்றது போல்

# தமிழ் மக்களின் மனங்களையும் கோத்தபாய வெல்லவேண்டும்

### இந்து சமயப் பேரவை வலியுறுத்துகின்றது

யாழ்ப்பாணம், நவ. 26

**போ**ரை முடிவுக்குக் கொண்டு வந்த தாங்கள் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்த்து தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியாது போனமை துரதிஷ்டவசமானதே.

தாங்கள் தீர்வை முன்வைக்காத காரணத்தால் தங்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்காது தமது உணர்வை வெளிப்படுத்தியிருப்பதாகவே உணர்வீர்கள். எனவே தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் தலைவர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த அரசதலைவர் தேர்தலில் தாங்கள் இலட்சோப இலட்ச வாக்குகளைப் பெற்று அரசதலைவராகத் தெரிவு செய்யப்பட்டமை எமக்குப் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தங்களுக்கு இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் அமோகமான வாக்குகளைச் செலுத்தி அரசதலைவராகத் தெரிவு செய்து வரலாற்றில் அழியாத புகழைத் தாங்கள் பெற வழிசெய்துள்ளார்கள். நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவந்த பெருமை தங்களுக்கு உண்டென்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்திருக்க முடியாது. எனினும் இத்தகைய சாதனை படைத்த தங்களுக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்காது போனமை தாங்கள் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

ஆதலால் தாம் பதவி ஏற்றிருக்கும் இந்தநேரத்தில் தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கி தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தங்கள் பதவிக்காலம் முடிந்தபின் வரும் அரசதலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் சிங்கள மக்களைப் போல் அணிதிரண்டு வாக்களிக்கும் ஓர் சூழலை ஏற்படுத்தித் தாங்கள் துணிந்து பயணிக்க வேண்டும் என்று மனதாரக் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்களுக்கு எமது வழிபடு தெய்வமாகிய சிறிசிவகாமசுந்தரி சமேத சிறிமத் நடராஜப் பெருமானின் திருவருள் அபரிமிதமாகச் சொரிய வேண்டுமென்று திரிகரண சுத்தியுடன் பிரார்த்திக்கின்றேன்- என்றுள்ளது. (த)

## சஜித்துக்கு இன்னமும் தகுதி வரவில்லை!

### ராஜித தெரிவிப்பு

கொழும்பு, நவ. 26

சஜித்பிரேமதாசஎதிர்க்கட்சித்தலைவர்பதவியைவகிப்பதற்கானதகுதியை இன்னும்அடையவில்லைஎன்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

கட்சிக்குள் நிலவிய முரண்பாடு தோல்விக்கு காரணமாக அமைந்தது. ஊழல் மோசடிகளை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நிறுவனங்கள் மேலும் அதிகமான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கின. அரச தலைவர் தேர்தல் நடவடிக்கைகளில் முன்னாள் தலைமைஅமைச்சர்ரணில்விக்கிரமசிங்கஅதிகசிரத்தையுடனும்அர்ப்பணிப்புடனும்செயற்பட்டார். ஆகவே அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையும் இல்லை.

எதிர்க்கட்சித்தலைவருக்கானதகுதிவெறுமனேபிரபல்யமடைந்திருப்பது மாத்திரம் அல்ல. மாறாக சாணக்கியமாகச் செயற்படுவது முக்கியமானது. அத்துடன் எதிர்க்கட்சித்தலைவர் என்பவர் பன்னாட்டுச்சமூகத்துடன் நெருங்கி செயற்படக்கூடிய ஒருவராக இருக்க வேண்டியது கட்டாயம்.

ஆனால் சஜித் பிரேமதாச என்பவர் குறைந்தளவு அரசியல் அனுபவத்தை கொண்டவர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க நீக்கப்பட்டால் அவரின் இடத்தைநிரப்புவதற்குதகுதியானதலைவர் ஒருவரை தான் கட்சிக்குள் அடையாளம் காணவில்லை.

சஜித்பிரேமதாசவை அரசதலைவர்வேட்பாளராகநியமித்த விடயத்தில் மற்றையவர்கள் அவசரப்பட்டு விட்டார்கள் - என்றார். (ஒ,5)

## விழிப்புணர்வு செயற்பாடு

யாழ்ப்பாணம்,நவ. 26

பெண்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நாடகம் ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பெண்கள் சமாச உறுப்பினர்களால் இளவாலை உயரப்புலம் கிராமத்தில் இந்த விழிப்புணர்வு நாடகம் அண்மையில் நடத்தப்பட்டது.

இதனை பெண்கள், சிறுவர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் பார்வையிட்டனர்.

பெண்களுக்கு எதிராக ஏற்படும் குடும்ப வன்முறை, பெண்கள் பாதிக்கப்படும் இடங்கள் மேலும் பாதிக்கப்படும் முறைகள், பாதிப்புகளில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விழிப்புணர்வு நாடகம் காண்பிக்கப்பட்டது. (ஐ-104)



## அரச தலைவர் பாதுகாப்பு பிரிவிலிருந்து விடுவிக்கப்படும் பொலிஸார்

கொழும்பு, நவ. 26

அரச தலைவர் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய பொலிஸ், சிறப்பு அதிரடிப்படையினரின் எண்ணிக்கையில் கணிசமான குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோத்தபாயவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, அரச தலைவர் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய ஆயிரத்து 400 பொலிஸார் இடமாற்றப்படுகிறார்கள். இவர்களில் இரண்டு மூத்த பொலிஸ் கண்காணிப்பாளர்கள், நான்கு பொலிஸ் கண்காணிப்பாளர்கள், ஐந்து உதவி பொலிஸ் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏழு தலைமை ஆய்வாளர்கள் உள்ளனர். அதேபோல, அரச தலைவர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட 850 சிறப்பு அதிரடிப்படையினரும் வேறு பணிகளுக்கு மாற்றப்படுகிறார்கள். எனினும், 300 சிறப்பு அதிரடிப்படையினர் தொடர்ந்தும் பாதுகாப்பு பணியிலிருப்பார்கள். பொலிஸ், சிறப்பு அதிரடிப்படையினர் என்று 2 ஆயிரத்து 250 பேர் வேறு கடமைகளிற்கு மாற்றப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவர்கள்நாடுமுழுவதிலுமுள்ளபொலிஸ் நிலையங்க ளில் கடமையாற்ற அனுப்பப்படவுள்ளனர். இதன்மூலம், பொலிஸ் நிலையங்க ளில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, அரச தலைவர் பாதுகாப்பு பிரிவு, இராணுவ கொமாண்டோ படையணி மற்றும் 300 தக்கவைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையினர் மட்டுமே பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரச தலைவர் பாதுகாப்பு பிரிவின் இயக்குநராக பணியாற்றிய எஸ்.எஸ்.பி.டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன ஓய்வு பெற முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெறவிருந்தவர் சேவைநீடிப்பு பெற்றிருந்தார். 62 வயதான இவர் தற்போது அரச தலைவர் பாதுகாப்பு பிரிவில் இருந்து இந்த வாரமளவில் ஓய்வுபெறலாமென தெரிவிக்கப்படுகிறது. (ஒ,5)

## நாட்டுத் தலைவர்களுக்கு ஆசி வேண்டி வழிபாடு

கொழும்பு, நவ. 26

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் நாட்டுக்கும் நல்லாசி வேண்டி காத்தான்குடியில் துஆப் வழிபாடு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. காத்தான்குடி நகர சபையின் ஏற்பாட்டில் இது இடம்பெற்றது.

காத்தான்குடி நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும் ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற வைபவத்தில் பொதுமக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.எம்.சியாட் உள்ளிட்ட நகர சபையின் மக்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என்று பலரும் பங்கேற்றனர். துஆப் வழிபாட்டை காத்தான்குடி முகைதீன் மெத்தை பெரிய ஜும் ஆப்பள்ளிவாசலின் பிரதம பேசிமாம் மௌலவி அமீன் பலாஹி நிகழ்த்தி வைத்தார். (ஒ,5)

## புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, நவ. 26

அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசின் கன்னி அமைச்சரவை கூட்டம் இன்று இரவு நடைபெறவுள்ளது.

முன்னாள் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் தமது பதவிகளில் இருந்து விலகியதை அடுத்து புதிய அமைச்சரவையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை 16 பேரைக் கொண்ட அமைச்சரவையை அரச தலைவர் நியமித்தார். புதிய அமைச்சர்களாக நியமனம் பெற்ற சகல அமைச்சர்களையும் உள்ளடக்கிய வகையில் அரச தலைவர் கோத்தபாய மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ஆகியோர் தலைமையில் முதலாவது அமைச்சரவை கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. (ஒ,5)

## பரீட்சார்த்திகளுக்கு முக்கிய அறிவிப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி பத்திரம் கிடைக்க பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தாம் கோரிய பாடம் மற்றும் பாட எண்ணில் மாற்றங்கள் இருப்பின் அது குறித்து பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்கள் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் பரீட்சைகள் திணைக்களத்தை தொடர்பு கொள்வதன் மூலம் அதனை திருத்திக்கொள்ள முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார். கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இந்தப் பரீட்சை 4 ஆயிரத்து 987 மைய நிலையங்களில் இடம்பெறவுள்ளன. கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இம்முறை 7 இலட்சத்து 17 ஆயிரத்து 8 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# இட மாற்றங்கள் தொடர்பாக மேன்முறையீடு செய்யலாம்

யாழ்ப்பாணம்,நவ.26

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் வருடாந்த இடம் மாற்றம் தொடர்பான மேன் முறையீடுகளை அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்வித் திணைக் களம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களுக்கு வருடாந்த இடம் மாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் சுமார் 200 க்கும் அதிகமான ஆசியர்களுக்கு இடம் மாற்றம் வழங்கப்பட்டது. நியமனம் பெற்ற வலயத்தில் சேவை காலத்தைப் பூர்த்தி செய்தவர்கள். மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு வகையான காரணங்களால் இடம் மாற்றங்கள் வழங்கப்படும். இடம் மாற்றச் சபையால் தீர்மானிக்கப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் இடம் மாற்றம் வழங்கப்படும்.

2020 ஆம் 221 ஆசிரியர்கள் இடம் மாற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு. அவர்களது பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடம் மாற்றம் தொடர்பான மேன் முறையீடுகள் இருப்பின் எதிர் வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். மேன் முறையீடு தொடர்பான இறுதி முடிவு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அறியத் தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## திறன்வகுப்பறை திறப்பும் பரிசளிப்பு நிகழ்வும்

வவுனியா,நவ.26

வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலையில் திறன்வகுப்பறை திறப்பும், பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுக் காலை இடம் பெற்றன.

பாடசாலை அதிபர் தியாகசோதி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களபிரதிக்கல்வி பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா , சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் முத்து இராதகிருஷ்ணன், மதிப்புறு விருந்தினராக வவுனியா தெற்கு ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.முரளிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை விருந்தினர்களால் திறந்து வைக்கப் பட்டது.

அதன் பின்னர் பாடசாலை முன்றலிருந்து அதிதிகள் மேலைத்தேய இசை மற்றும் மாணவர்களின் நடனத்துடன் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

கலாசார மண்டபத்தில் மாணவர்களின் நடனம் இடம்பெற்றதுடன் பரிசளிப்பு நிகழ்வும் , சஞ்சிகை வெளியிடும் இடம் பெற்றன.

மேலும் நிகழ்வில் அயல் பாடசாலை அதிபர்கள் ., ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் , பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-ரி4)

## டெங்கு ஒழிப்புச்செயற்றிட்டம் வவுனியா நகரில் மும்முரம்

வவுனியா, நவ.26

டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வவுனியாவில் பாரிய செயற்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத்திணைக்களம் தனியார் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் பங்களிப்புக்களுடன் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

டெங்கை ஒழிக்கத் தவறியவர்களுக்கு எதிராக நாளைமறுதினம் மேற்கொள்ளும் தரிசிப்பை அடுத்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையால் வவுனியா நகர்ப்பகுதிகளில் டெங்கு நும்புகள் பெருகின. டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை சுகாதாரத் திணைக்களம் அண்மையில் முன்னெடுத்தது. தனியார் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் பங்களிப்புக்களுடன் கடந்த சனிக்கிழமை இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. நெளுக்குளம் பொது சுகாதாரப்பரிசோத கர் எஸ். ஜி. வோல்டயனின் தலைமையில் இடம்பெற்ற இந்த செயற்றிட்டத்தில், தனியார் ஆடைத் தொழிற்சாலையின் 190 ஊழியர்கள், 23 குடும்பநல அலுவலர்கள், எட்டு பொது சுகாதாரப்பரிசோதகர்கள் இணைந்திருந்தனர்.

வவுனியாவில் பல்வேறு பகுதிகள் சோதனையிடப்பட்டன. வவுனியா நகர்ப்பகுதியில் 761 வீடுகள் சோதனையிடப்பட்டன. நுளம்பு பெருக்கெடுக்கக் கூடியதாக இருந்த 335 இடங்கள் இனங்காணப்பட்டன. 10 இடங்களில் டெங்கு நும்புக் குடம்பிகள் இனங்காணப்பட்டன. அந்த இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று வரை 310 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. வவுனியாவில் டெங்கு கட்டுப்பாடு தொடர்பான நடவடிக்கைகளை பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம் மகேந்திரன் முன்னெடுத்து வருகிறார்.

வவுனியாவிலுள்ள பொதுமக்கள் அரச திணைக்களங்கள், தனியார் துறையினர் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் போன்ற பகுதிகளை சுத்தப்படுத்தி துப்பரவுப்பணிகள் மேற்கொண்டு நுளம்பு பெருக்கத்தைக்கட்டுப்படுத்த முழு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு பொது சுகாதாரப்பரிசோதகர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)

## குருதிக் கொடை

கிளிநொச்சி,நவ.26

"குருதிக் கொடை செய்வோம் உயிரைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில், பரந்தன் விவசாயக் கல்லூரியில் குருதிக் கொடை முகாம் நாளை புதன்கிழமை இடம்பெறும்.

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் குருதித் தட்டுப்பாடு நிலவுவதால், இலங்கை விவசாயக் கல்லூரி பரந்தன் மாணவர் ஒன்றியத்தால், குருதிக் கொடை முகாம் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நாளை காலை 8 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை பரந்தன் இலங்கை விவசாயக் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் குருதிக் கொடை முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## கல்விசார் சேவை நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.26

சண்டிலிப்பாய் கோட்டத்தில் 2019 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும்,கல்விசார் சமூகத்தையும் மதிப்பளிக்கும் வகையில் கல்விசார் சேவை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் பிற்பகல்.2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பன்னாட்டு லயன்ஸ் கழகங்கள் மாவட்ட 306 பீ1 மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள் மேலதிக பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## தேர்தலுக்குப் பின்னரான சூழலை ஆராய்ந்துள்ளோம்

### சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

நடைபெற்று முடிந்த அரசதலைவர் தேர்தலுக்குப் பின்னரான சூழல்பற்றி திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் ஆராய்ந்தோம். ஆனால் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனாதிராசா தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மக்களின் வாக்களிப்பு வீதம் குறித்தும், வாக்களிப்பு வீதம் அதிகரித்த போதும் நாங்கள் ஆதரித்த வேட்பாளரின் தோல்விக்கான காரணங்கள் குறித்தும் ஆராய்ந்தோம். அரசதலைவர் இந்தியா சென்று வந்தபின்னர். அடுத்த கட்டம் சம்மந்தமான தீர்மானங்களை மீண்டும் எமது அரசியல் குழு மற்றும் கட்சியின்மத்தியகுழுகூடித்தீர்மானிக்கும். இந்தமாத முடிவில் அது மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராகச் செயற்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. என்று மேலும் தெரிவித்தார். (கு-104)

## தீ விபத்தில் 4 கடைகள் எரிந்து நாசம்

மலையகம்,நவ.26



திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு கடைகள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் முதன்மை நகரில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது. சில்லறைக் கடை, இருவெட்டு கடை, பழக்கடை மற்றும் வடைக்கடை ஆகிய நான்கு கடைகளே முற்றாக எரிந்தன இத் தீவிபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை என்றும் பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

பிரதேச பொது மக்கள், நோர்வூட் பொலிஸார் ஆகியோர் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். எனினும் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப் படவில்லை என்றும் மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்பட்ட தீ காரணம் தொடர்பாகவும், சேத விபரங்கள் தொடர்பாகவும் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூ.3 மில்லியன் செலவில் பொதுநோக்கு மண்டபம்


### முதல்வர் அடிக்கல் நட்டார்

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணம் ஜே 88 (10 ஆம் வட்டாரம்) கிராம அலுவலர் பிரிவில் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்படவுள்ளது. அதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் எம்.எம்.எம். நிபாஹிர் தலைமையில் ஜே 88 முதியோர் சங்கத் தலைவர் தம்பிராசாவின் நெறிப்படுத்தலில் இது நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனல்ட் கலந்துகொண்டு அடிக்கல் நட்டார்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர மராமத்துக் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், ஜே 88 முதியோர் சங்க உறுப்பினர்கள், பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்று முதல்வரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (தி)



# சிறுபொருள்கள் வாங்கக்கூட கிராமத்தில் சந்தையில்லை

## விரைவில் அதை அமைக்கவேண்டுமென்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 26

**போர்** முடிந்து 10 ஆண்டுகள் கடந்தும் மரக்கறி உட்பட சில்லறைப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்குக்கூட 38 கிலோமீற்றர் தூரம் பயணிக்கவேண்டியுள்ளது. எனவே தமது பகுதியில் நிரந்தர பொதுச் சந்தை அமைத்துத் தரவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட எல்லைக் கிராமங்களாகத் திகழும் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி போன்ற கிராமங்களில் வாழும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் சுமார் 3 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்த நிலையில் போர் முடிந்த 10 ஆண்டுகளில் கடந்து விட்ட பின்னரும் எமது பகுதியின் அபிவிருத்தியில் எவருமே அக்கறைகொள்ளவில்லை. மாகாணத்தின் எல்லைப் பகுதி மக்களாக வாழும் தமிழ் மக்கள் இன்றும் போரை ஒத்த நெருக்கடிகளையே எதிர்கொள்கின்றனர்.

எமக்கு நிரந்தரப் பொதுச் சந்தை அமைத்துத் தரவேண்டும் என்று நாங்கள் நீண்டகாலம் கோரிக்கை முன்வைத்தும் எவருமே கண்டுகொள்ளவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளான கொக்குளாயில் 300 குடும்பங்களும், கருநாட்டுக்கேணியில் 160 குடும்பங்களும் கொக்குத்தொடுவாயில் 400 குடும்பங்கள் வாழ்கின்றன.

இந்த மக்களுக்கு இன்று வரை நிரந்தர சந்தை கிடையாது, நிரந்தர பல்பொருள் வாணிபம் கிடையாது. இதனால் வாரத்துக்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு தடவையோ தொழிலைவிட்டு 38 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து முல்லைத்தீவு நகர சந்தையில் கொள்வனவு செய்து பின்னர் பேருந்துகளில் அவற்றை எடுத்து வரவேண்டிய நிலையே காணப்படுகின்றது. இதனால் ஒரு நாள் பணிகள் முடங்குகின்றன. எஞ்சிய நாள்களில் வாடிய மரக்கறிகளையே உண்ணவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது கிராமத்தில் ஓர் அங்காடி அமைத்துத் தருமாறு கோரி அதற்கென்று சொந்த நிலத்தையே வழங்கவும் முன்வந்தோம். இருப்பினும் எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை.

மக்கள் இல்லாத கிராமங்களில் கட்டப்பட்ட அங்காடிகள் தற்போது கால்நடைகள் படுத்துறங்கும் கூடார மாகக் காட்சியளிக்கின்றன. எமது கிராமங்களின் முக்கியத்துவம் கருதி இந்தப் பகுதியில் பொதுச் சந்தையுடன் கூடிய வணிக நிலையம் ஒன்றை அமைக்க புதிய அரசு முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றனர்.

### பன்றியால் பிரச்சினை

இதேவேளை, இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்துக்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவிலங்கம் வெளியிலுள்ள 66 ஏக்கர் வயல்ப் பகுதியில் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபட முடியாதவாறு சிங்கள மக்கள் ஆயிரக் கணக்கான பன்றிகளை வளர்க்கின்றனர் என்று விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

100க்கும் மேற்பட்ட தென்னிலங்கையர்கள் தமது வாழ்வாதாரமாக அதிக பன்றிகளை பாதுகாப்பற்ற முறையில் வளர்க்கின்றனர்.

அவற்றைத் திறந்துவிட்டு வளர்ப்பதால் இரவு, பகல் பாராது மக்கள் வாழ்விடங்களுக்குள் படையெடுக்கின்றன. இவை வளர்ப்பு இனத்தைச் சேர்ந்தமையால் மக்கள் நடமாட்டத்துக்கோ அல்லது நாய்களுக்கோ அஞ்சுவது கிடையாது. அதனால் 24 மணித்தியாலங்களும் பயிர்களுக்காக காவல் இருக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

### நில ஆக்கிரமிப்பு

இங்கு வாழும் அநேகரின் பூர்வீக நிலங்கள் முகத்துவாரம் பகுதியில் காணப்படும் உறுதிக்காணிகளே. அவற்றை ஆக்கிரமித்தே தற்போது பல தென்னிலங்கையர்கள் கொட்டகை அமைத்து குடியிருக்கின்றனர். அந்தப் பகுதியைத் தமக்கே நிரந்தரமாக வழங்க வேண்டும் என்று தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவின் முகத்துவாரம் பகுதியில், தமிழ் மக்களின் உறுதிக் காணிகளில் நீண்டகாலமாக அடாத்தாக குடியிருக்கும் சிங்கள மக்களுக்கு அந்தப் பகுதியைச் சுவீக ரித்து வழங்குமாறு பிரதேச செயலரை வடக்கு மாகாண ஆளுநர் பணித்திருந்தார்.

ஆனால், முல்லைத்தீவில் அறுதி உறுதிக்காணியை கையகப்படுத்தி தாம் விரும்பிய ஒருவருக்கு வழங்குமாறு கூறும் எதேச்சை அதிகாரம் வடக்கு மாகாண ஆளுநருக்கு எந்தச் சட்ட ஏற்பாடு வழங்குகின்றது? இது பற்றி வடக்கு மாகாண ஆளுநர் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் அந்தப் பகுதி 100 ஆண்டுகளாக நாங்கள் வாழ்ந்த சொந்த நிலம்.

சட்டப்படி எமது நிலம் எமக்குக் கிடைக்கவே இந்த ஆளுநர் பாடுபட்டிருப்பாரானால் அவர் மாகாண ஆளுநராகப் பார்க்கப்படுவார். அல்லது இந்த மாகாணத்தில் உள்ள ஓர் இனத்துக்கு மட்டுமே ஆளுநரா? என்ற சந்தேகம் எழுகின்றது.

தற்போதைய ஆட்சியாளர்கள் இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு தரவேண்டும். அதனை நிறைவேற்று வார்களா? எனக் கேள்வி எழுப்புகின்றனர். (த-105)

நாளை நள்ளிரவுடன்

## சா/த பரீட்சைக்கான வகுப்புகளுக்கு தடை

யாழ்ப்பாணம், நவ. 26
கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியன நாளை நள்ளிரவுடன் நிறைவுசெய்யப்பட வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது

எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளன.

இந்த முறை பரீட்சைக்கு 4 இலட்சத்து 33 ஆயிரத்து 50 பாடசாலை பரீட்சாத்திகளும், 2 லட்சத்து 83 ஆயிரத்து 958 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்கலாக 7 இலட்சத்து 17 ஆயிரத்து 8 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

குறித்த பரீட்சைக்காக விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்படஉள்ளன. 4 ஆயிரத்து 987 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை இம்முறை பரீட்சைகள் நடைபெறவுள்ளன. பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் ஆகியன எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுசெய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# முன்னாள் ஆட்சியாளர்களின் படங்கள் அகற்றப்படுகின்றன

கொழும்புத்துறை,நவ.26
சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் தேர்தலில் வெற்றிபெற்று, அரச தலைவராகப் பதவியேற்றுள்ளதை அடுத்து, முன்னாள் ஆட்சியாளர்களின் ஒளிப்படங்கள் தாங்கிய கட்டவுட்டுக்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

முன்னாள் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாச மற்றும் சில அமைச்சர்களைத் தாங்கி அமைக்கப்பட்டிருந்த கட்டவுட் மற்றும் பதாதைகள் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் நகர்ப்பகுதி, புறநகர்ப்பகுதிகள், கிராமப்புறங்கள் தோறும் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த காட்சிப்படுத்தல் பலகைகள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான விளம்பரப்பலகைகள் என்பன அகற்றப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதேவேளை அரச அலுவலகங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பாடசாலைகளில் தொங்கவிடப்பட்டிருந்த முன்னாள் ஆட்சியாளர்களின் படங்களும் அகற்றப்பட்டுள்ளன.

புதிய அரசதலைவர் கோத்தபாய ராஜபக்ச தனது படங்களைக் காட்சிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அரச நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஆதரவாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். (க-135)

# மாவீரர்களின் பெற்றோருக்கு வேலணையில் மதிப்பளிப்பு




யாழ்ப்பாணம், நவ. 26

யாழ்ப்பாணம் தீவகத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர். வேலணை சாட்டி மாவீரர் துயிலுமில்லக் குழுவினரால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, மாவீரர் துயிலுமில்லத்துக்கு அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவருடைய பாரியார் யசோதை சரவணபவன் ஆகியோர் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இதன்போது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

மாவீரர் தின இறுதி நாளான நாளை புதன்கிழமை மாவீரர் நிகழ்வைச் சிறப்பாகச் செய்யவும் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

நாளை மாவீரர் தினத்தை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கும் நோக்கில் மாவீரர் துயிலுமில்லங்களில் அதற்கான ஏற்பாடுகள் முழுமையடைந்துவருகின்றன. (து)

## சர்வாதிகாரி...

அரச தலைவராகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளதாவது;

போர்க் காலத்தில் என்னைப் பற்றித் தவறான தகவல்கள் வெளியாகின. இவற்றையெல்லாம் பொய்ப்பித்துத்தான் இலங்கை மக்கள் என்னைத் தற்போது அரச தலைவராகத் தெரிவு செய்துள்ளார்கள்.

நான் 20 ஆண்டுகள் இராணுவத்தில் பணியாற்றியுள்ளேன். நான் பயங்கரவாதத்துக்கு எதிராக இராணுவத்தில் இருந்து போரிட்டேன். இதன் பின்னர் இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்று அமெரிக்காவில் 12 ஆண்டுகள் வாழ்ந்தேன். பின்னர் பாதுகாப்புச் செயலாளராக நாட்டுக்கு வந்தேன்.

மக்கள் என்னைப் பாதுகாப்புச் செயலாளர் என்றே அழைத்தனர். அதனால் மக்கள் என்னை சர்வாதிகாரியாக நினைக்கக் கூடும். நான் சட்டத்தை மதிக்கும் நபர். இதனால் என்னை மற்றைய சமூகத்துக்கு எதிரான இனவாதி என்றோ அல்லது சர்வாதிகாரி என்றோ அடையாளப்படுத்த முடியாது. நான் இனவாதியோ, சர்வாதிகாரியோ அல்ல என்பதை எனது செயலில் ஒப்புவித்துக் காட்டியுள்ளேன்.

நான் சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே சேவையாற்ற மாட்டேன். நாட்டை அபிவிருத்தி செய்யவும், நாட்டைக் கட்டியெழுப்பவும் என்னுடன் இணைந்து செயற்படுமாறு தமிழ், முஸ்லிம் சமூகங்கள் உட்பட அனைவருக்கும் அழைப்பு விடுத்தேன். எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்.

எதிர்க்கட்சி என்னை சர்வாதிகாரியாக காண்பிக்க முடியும். எனது செயல்கள் மூலம் நான் யார் என்பதை மக்கள் கண்டிருக்கலாம். அதேபோலவே என்னுடன் அவர்களை இணையுமாறு கோருகின்றேன். குறிப்பாக ஊடகங்கள் பல்வேறு வதந்திகளையும் பொய்ப் பரப்புரைகளையும் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

என்னைப் புரிந்துகொள்ள என்னுடன் பேசுங்கள். என்னைச் சந்தித்து நான் என்ன செய்கின்றேன் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடியும். இது சம்பந்தமான தெளிவான தோற்றத்தை அவர்களால் மற்றவர்களுக்கு வழங்க முடியும். இலங்கை சிறிய நாடு. இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய அவர்கள் எமக்கு உதவ வேண்டும். எனது பயணத்துக்குத் தடையாக இருக்காதீர்கள். அதனால் எவருக்கும் எந்த நன்மையும் இல்லை.

முக்கியமாக வதந்திகள் மற்றும் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டாம் என வெளிநாட்டு ஊடகங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் என்னிடம் பேச முடியும். என்னைச் சந்தித்து நான் என்ன செய்கிறேன்? நான் வேலை செய்யும் விதம் எப்படி? என்பவை தொடர்பில் உண்மையை வழங்குங்கள்என்றார். (எ-22)

## மாவீரர்...

ப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவதுப:

கடந்த நான்கு ஆண்டுகளாக மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தலைச் செய்கின்றோம். கடந்த காலங்களில் எவ்வாறான நிலமை காணப்பட்டதோ அதே போன்றதான நிலமையே இன்றும் காணப்படுகின்றது. இன்றுவரை எவ்வித அச்சுறுத்தல்களும் காணப்படவில்லை. மக்கள் சுதந்திரமாகத் தமது நினைவேந்தலை மேற்கொள்ள முடியும்.

கிளிநாச்சி கனபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு இருபதாயிரம் பேர் வரை மக்கள் வந்து செல்வர். எனவே குறித்த மக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நாம் பொலிஸாரிடம் கோரிக்கை விடுக்க உள்ளோம். கடந்த காலங்களைப் போன்று தமது உறவுகளை அஞ்சலிக்க முடியும். மக்கள் அச்சமின்றி வருகை தர முடியும்என்றார். (க-6)

## பிரிட்டன்...

பட்டுள்ளது.

பழமைவாதக் கட்சியின் பிரிட்டன் தமிழர்களுக்கான செய்தித் தொடர்பாளர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது. இலங்கையைப் பலஸ்தீனத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கட்சி மேலிடம் இந்த விடயத்தில் தாம் கொண்டுள்ள எண்ணப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை தொடர்ந்து தமிழர்களுக்கு நீதி வழங்காது பின்னடித்தாலோ அல்லது தமிழர் அபிலாசைகளுக்கு ஏற்ற தீர்வு ஒன்றை வழங்க வழங்க மறுத்தாலோ பன்னாடுகள் இரு தேசக் கோட்பாட்டை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அங்குள்ள தொழிற்கட்சி, தாம் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால் இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தொழிற்கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவரான ஜோன் மக்டோனல், தமிழ் மக்களின் போராட்டத்தில் நாம் தொடர்ந்தும் அவர்களுக்குப் பக்கபலமாக நிற்போம் என்று தனது ருவிற்றர் சமூக வலைத்தளப் பக்கத்தில் காணொளி மூலமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்த பின்னரும் போர்க் குற்றங்கள் மற்றும் தமிழர்கள் மீதான இனப் படுகொலை, அச்சுறுத்தல்களுக்கு எந்தவிதமான பொறுப்புணர்வும் அங்கு ஏற்படவில்லை.

தமிழ் மக்களுக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும். அந்த அரசியல் தீர்வு தமிழர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அமைவது முக்கியம். தமிழ் மக்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகி க்கப்படுவது, புதிய அரசதலைவர் பதவியேற்றி ருப்பது போன்றவை எதிர்காலம் பற்றியகவலையைத்தோற்றுவித்திருக்கின்றது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (எ)

## குளத்தில்..

சேர்ந்த ந.திவாகரன் (வயது-19), செல்வன் சதுர்சன் (வயது-19) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இந்தக் குளம் அண்மையில் தோண்டப்பட்டது. நேற்று முற்பகல் 5 நண்பர்கள் மீன்பிடியில் ஈடுபட்டதுடன், குளித்து ள்ளனர். அதன்போது அவர்கள் குளத்தின் நடுவில் சகதியில் சிக்கியுள்ளனர். அந்தப் பகுதியில் இருந்தவர்களால் இருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். ஏனைய மூவரும் நீரில் மூழ்கியுள்ளனர்.

அந்தப் பகுதி மக்கள் இணைந்து நீரில் மூழ்கியவர்களைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரத் தேடுதலின் பின்னர் நீரில் மூழ்கியவர்கள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

## கடல் அலை...

இவர் நேற்றுக் காலை 6 மணியளவில் தனது மைத்துனருடன் மீன் பிடிக்கச் சென்றுள்ளார். கரையில் இருந்து இரண்டு கடல் மைல் தூரத்தில் அவர்கள் சென்று கொண்டிருந்தபோது கடகில் பெரும் அலை தோன்றியுள்ளது.

படகின் பின்புறம் இடதுபக்கத்தில் அமர்ந்திருந்த பெப்சிக்கர் அதனால் தூக்கி எறியப்பட்டுள்ளார். அவர் வீசியெறியப்பட்ட இடத்தில் இருந்து படகு நகர்ந்து சென்றதாலும், படகின் வெளிக்கள இயந்திரம் அந்தச் சமயம் உடனடியாக இயங்காததாலும் அவரை உடனடியாகக் காப்பாற்ற முடியவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

படகின் நங்கூரத்தைக் கடலில் இட்டுப் படகை நிறுத்தி விட்டுக் கடலில் விழுந்தரை உறவினர் காப்பாற்ற முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கரையில் இருந்த மீனவர்களுக்கு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டு பல மீனவர்கள் படகுகளில் வந்து அந்தப் பகுதியில் தேடுதல் நடந்தினர். எனினும் பெப்சிக்கர் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவரின் உடல் மீனவர்களால் கரைக்குக் கொண்டு வரப்பட்டது. மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இறப்பு விசாரணை அதிகாரி சந்தியா எட்வேட் குணகுமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உடலை உறவினர்களிடம் கையளிக்கவும் உத்தரவிட்டார்.

(எ-60,56,105)

## பேருந்து..

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தும், வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

டிப்பர் வாகனத்தில் பயணித்த இருவரே காயமடைந்தனர். பேருந்தில் 3 பேர் மட்டுமே பயணித்துள்ளனர். அவர்களுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை.

இரு வாகனங்களும் கடும் சேதமடைந்தன. மாங்குளம் பொலிஸார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அம்பாந்தோட்டை...

கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தி நோக்கிச் செல்லும் பயணத்துக்கான தொடர்பு மாத்திரமே சீனாவுடன் இருந்தது. எந்தவகையிலும் உலக வல்லரசுகளில் அதிகாரப் போட்டியின் நடுவில் சிக்கும் அவசியம் இலங்கைக்கு இல்லை.

பூகோள ரீதியான இலங்கையின் அமைவிடம் மிகவும் முக்கியமானது. ஆசிய பிராந்திய நாடுளுடன் இணைந்து முன்னேற்றத்தை நோக்கி இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்.

இலங்கை; இந்தியாவுடன் எப்போதும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கும். இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எதனையும் செய்ய எந்த அவசியமும் இல்லை.

சீனா நம்முடைய ஒரு நல்ல நண்பராகவும் அபிவிருத்திக்கு அவர்களின் உதவி தேவைப்பட்டாலும், அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தவறு என்று சொல்ல நான் பயப்படப்போவதில்லை.

ஒரு செயற்பாட்டுக்காக துறைமுகத்தின் ஒரு முனையத்தை கொடுப்பது வேறு விடயம், ஒரு விடுதியைக் கட்டுவதற்கு சில இடங்களைக் கொடுப்பது வேறு. இது ஏற்புடையதல்ல. இதுவே எனது நிலைப்பாடு -என்றார். (எ-22)



## கென்யாவில் நிலச்சரிவு 60 பேர் பரிதாபச் சாவு

நைரோபி,நவ.26

கென்யாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 60 பேர் பரிதாபமாகச் சாவடைந்தனர். இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது: கென்யாவின் வடமேற்குப் பகுதியில் கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்தது. இதனால் மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 60 பேர் சாவடைந்தனர். இதில் 7 பேர் குழந்தைகள். பலர் காணாமல்போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணி நடந்து வருகிறது. இந்த நிலச்சரிவு காரணமாகப் பல இடங்களில் வீதிகள் மற்றும் பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். உலங்கு வானூர்திகளின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்கனள மீட்கும் பணிகள் நடந்து வருகின்றன. மீட்கப்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கென்யாவில் அடுத்த மூன்று வாரங்களுக்கு மழை நீடிக்கும் என்று அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அசாஞ்சேவுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை தேவை

### மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

லண்டன்,நவ.26

கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டுள்ள விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேவுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை தேவை பிரிட்டனைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இணைந்து சுட்டிக்காட்டினர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்கள் தொடர்பான ஆவணங்களை வெளியிட்டதாக ஆஸ்திரேலிய பத்திரிகையாளரும் விக்கிலீக்ஸ் நிறுவனருமான ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்கா கைது செய்ய முற்பட்டது. இதற்கிடையே அவர் மீது சுவீடன் அரசு பாலியல் குற்றம் சுமத்தியது. இதனால் நாடு கடத்தும் சூழ்நிலைக்கு ஆளான நிலையில் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈக்வெடார் தூதரகத்தில் 2012ஆம் ஆண்டில் தஞ்சமடைந்தார்.

9 ஆண்டுகள் அந்தத் தூதரகத்திலேயே தஞ்சம் அடைந்திருந்த அசாஞ்சேவுக்கான அடைக்கலத்தைத் திடீரென ஈக்வடார் அரசு நிறுத்தியது.

இதனைத் தொடர்ந்து அவர் லண்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட அவருக்கு 50 வாரம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் தனிமைச் சிறையில் தள்ளப்பட்டதால் சில மாதங்களுக்கு முன் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது.

60க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் சென்று சிறையிலுள்ள அசாஞ்சேவைச் சந்தித்து அவரது உடல்நிலை குறித்த அறிக்கையிட்டனர். பின்னர் பிரிட்டன் அதிகாரிகளுக்கு அவசரக் கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தில், "அசாஞ்சே மனச்சோர்வு மற்றும் பல் பிரச்சினைகள் மற்றும் கடுமையான தோள்பட்டை நோய் உள்ளிட்ட உளவியல் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உடனடியாக ஒரு பல்கலைக்கழக மருத்துவமனையில் முழுமையான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்" என்று சுட்டிக்காட்டினர்.

# ஹொங்கொங்கில் தேர்தல்!






ஹொங்கொங்,நவ.26

ஹொங்கொங்கில் போராட்டங்கள் நடந்துவருகின்ற நிலையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்களிப்புகள் நடந்தன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

கடந்த 6 மாதங்களாகக் ஹொங்கொங்கில் போராட்டம் நடந்து வருகிறது. வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இந்த நிலையில் ஹொங்கொங்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் ஆகியிருக்கிறது. ஏனெனில் இந்த தேர்தல் ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லொமுக்கு இருக்கின்ற ஆதரவைப் பரிசோதிப்பதற்கான ஒருசோதனையாகக்கருதப்படுகிறது. அதாவது அங்கு 6 மாதங்களாக அரசு எதிர்ப்பு போராட்டம் நடந்து வரும் நிலையில் தற்போதைய அரசுக்கு மக்களிடம் எவ்வளவு ஆதரவு உள்ளது என்பதை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தும் என்று நம்பப்படுகிறது. இதன்படி இந்தத் தேர்தலில் ஹொங்கொங்கின் 18 மாவட்டங்களில் உள்ள 452 பிரிவுகளில் ஆயிரத்து 90 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலில் ஹொங்கொங்கின் மக்கள் தொகையான 70 லட்சத்து 40 ஆயிரம் பேரில் 40 லட்சத்து 10 ஆயிரம் பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். போராட்டம் காரணமாக மக்கள் வாக்களிப்பதற்குத் தயக்கம் காட்டுவார்கள் என்று கருதப்பட்ட நிலையில் அதற்கு நேர் மாறாக அனைவரும் வாக்களிப்பதில் மும்முரம் காட்டினர்.

நேற்று வெளியாகிய ஒரு சில தேர்தல் முடிவுகளின் ஜனநாயக ஆதரவு எதிர்க்கட்சி இயக்கம் பெரும்பாலான இடங்களில் முன்னிலை பெற்றிருந்தது.





போராட்டங்களுக்கு மத்தியில் ஹொங்கொங்கில் நடந்த உள்ளூராட்த் தேர்தலில் வராக்களிப்பதற்கு மக்கள் ஆர்வம் காட்டியதாகத் தெரிவித்துப் பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ் வெளியிட்ட ஒளிப்படத் தொகுப்பில் இருந்து சில ஒளிப்படங்கள்.


## ஹிந்தியில் பேசுமாறு நடிகையை வற்புறுத்தியவருக்கு பதிலடி

ஆடுகளம் உட்பட்ட தமிழ்ப் படங்களில் நடத்த நடிகையான டாப்சியைக் ஹிந்தி மொழியில் பேசுமாறு வலியுறுத்திய நபருக்கு டாப்சி வழங்கிய பதில் அதிக பேசுபொருளானது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

இந்தியாவின் கோவாவில் நடைபெற்றுவரும் பன்னாட்டுத் திரைப்பட விழாவின் அமர்வு ஒன்றில் நடிகை டாப்சி கலந்துகொண்டு பலரது கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதிலளித்துக் கொண்டிருந்தார். அப்போது, குறுக்கிட்ட நபரொருவர், டாப்சியிடம் ஹிந்தி மொழியில் பேசும்படி வலியுறுத்தினார். உடனே, பார்வையாளர்களை நோக்கிய டாப்சி, 'இங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் ஹஜந்தி தெரியுமா?' என்று கேட்டார். அதற்குப் பெரும்பாலானோர் இல்லை என்று பதிலளித்தனர். இருப்பினும், அந்த நபர் தொடர்ந்து, 'நீங்கள் ஒரு பொலிவூட் நடிகை. எனவே ஹிந்தி யில்தான் பேச வேண்டும்' என்று தெரிவித்தார். 'நான் தமிழ், தெலுங்கு திரைத்துறை யிலும் நடித்து வருகிறேன். எனவே, நான் உங்களிடம் தமிழில் உரையாடலாமா?' என்று டாப்சி கேட்டார். அங்கு கூடியிருந்த பார்வையாளர்கள் ஆர்ப்பரித்தனர். கேள்வி எழுப்பிய அந்த நபர் அமைதியாக உட்கார்ந்துவிட்டார். இந்த விடயம் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் அதிகளவில் சிலாகிக்கப்படுகிறது.

# 14,000 ஆடுகளுடன் கவிழ்ந்தது கப்பல்!

## கப்பலைச் சூழ்ந்த 33 ஆடுகள் மீட்பு





பச்ஷெரஸ்.நவ.26

14ஆயிரம் செம்மறி ஆடுகளை ஏற்றியவண்ணம் ருமேனியாவின் கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்று கவிழ்ந்ததில் ஆடுகள் அனைத்தும் கடலுள் மூழ்கின. உடனடியாக 33ஆடுகள் மீட்கப்பட்டாலும், ஏனைய ஆடுகளை மீட்பதற்கு மீட்புப் பணியாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

நாற்புறமும் தரையால் சூழப்பட்ட கருங்கடலில் உள்ள மிடியா என்னும் துறைமுகத்திலிருந்து 14 ஆயிரம் செம்மறி ஆடுகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்ட 'திகுயின் ஹிந்த்' என்னும் கப்பல் புறப்பட்ட சிறிது நேரத்தில் கவிழ்ந்தது. அந்த கப்பலில் இருந்த சிரியாவைச் சேர்ந்த 22 பணியாளர்கள் உடனடியாக மீட்கப்பட்டனர். அதையடுத்து அந்தக் கப்பலில் இருந்த ஆடுகளை மீட்கும் பணியில் பொலிஸார், தீயணைப்புப் பணியாளர்கள், கடற்படையினர் அடங்கிய கூட்டு மீட்புப்படை ஈடுபட்டது.

இந்த நிலையில் அருகிலுள்ள மற்றொரு கப்பலைச் சுற்றி நீந்திக் கொண்டிருந்த சுமார் 33 ஆடுகள் மீட்கப்பட்டன. ஏனைய ஆடுகள் பெரும்பாலும் கடலில் மூழ்கிச் சாவடைந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. கப்பல் கவிழ்ந்ததற்கான காரணம் தெரியவரவில்லை. ஆடுகளையும், கப்பலையும் மீட்கும் நடவடிக்கை முடிந்ததும் இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் கடத்திய நீர்மூழ்கிக் கப்பல் சிக்கியது

மட்ரிட்,நவ.26

3தொன் வரையிலான நிறை உடைய கொக்கைன் போதைப்பொருட்களுடன் பயணித்த நீர்மூழ்கிக் கப்பல் சிறைப்பிடிக்கப்பட்டது.

ஸ்பெய்னின் கலிசியா தன்னாட்சி பிரதேசத்தில் உள்ள போன்டெவ்ட்ரா மாகாணக் கடல்பகுதியில் இந்தச் சம்பவம் நடந்தது. குறித்த நீர்மூழ்கிக் கப்பலை ஸ்பெய்ன் சட்ட நடைமுறைத்துறை அதிகாரிகள் நேற்றுமுன் தினம் சிறைப்பிடித்தனர். கப்பலின் இருந்த இரண்டு மாலுமிகளும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர்.

குறித்த நீர்மூழ்கியைப் பரிசோதனை செய்வதற்கு அதிகாரிகள் வருவதை அறிந்த கப்பலின் மாலுமிகள் அந்தக் கப்பலை முழுமையாக நீரில் மூழ்கச் செய்ய முயற்சித்துள்ளனர். 20 மீற்றர் நீளமுடைய அந்த நீர்மூழ்கிக் கப்பல் கொலம்பியா அல்லது போர்த்துக்கல் நாட்டில் இருந்து வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.



## கொங்கோவில் வானூர்தி விபத்து 29பேர் சாவு - பலருக்குக் காயம்

கின்சஷா,நவ.26

ஆபிரிக்க நாடான கொங்கோவில் வானூர்தி ஒன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் 29 பேர் சாவடைந்தனர். கொங்கோவின் கோமா நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. கோமா நகரிலிருந்து 350கிலோமீற்றர் தொலைவில் உள்ள பெனி நகருக்குச் செல்லும்போது இடையிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

'டோர்னியர் 22' என்ற சிறிய ரக வானூர்தியே வீடுகளுக்கு இடையே வீழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து ஏற்பட்ட பகுதியில் கடுமையான புகைமூட்டம் காணப்பட்டது. இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும், விமானியின் தவறு காரணமாக இந்த விபத்து நிகழ்ந்து இருப்பதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வானூர்தியின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயல்களில் கூடுதல் நேர்த்தி உருவாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** முன்னர் உங்களுக்கு எதிராக செயல்பட்டவர் விலகுகிற நன்னிலை உருவாகும். தொழிலில் உற் பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். ஆதாய பணவரவுகிடைக்கும்.

**மிதுனம்:** பணி தாமதம் ஆவதால் சஞ்சலம் கொள்வீர்கள். நண்பரின் உதவி ஊக்கம் தரும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை உண்டு. புதிய இனங்களில் பண செலவு ஏற்படலாம்.

**கடகம்:** எதிர்மறையான சூழல்களில் விலகுவதால் நன்மை பெறலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சீரான முன்னேற்றம் பெறும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும்.

**சிம்மம்:** உயர்வுதாழ்வுகருதாமல்எவரிடமும் இனிய வார்த்தை பேசுவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து பண வரவு கூடும்.

**கன்னி:** நண்பரின் பேச்சு வருத்தம் தரும். பொறுமையால் அவர் மனதில் இடம் பெறுவீர்கள். தொழில், வியரபாரம் தாமத கதியில் இயங்கும். அளவான பண வரவு கிடைக்கும். செலவுகளில் சிக்கனம் அவசியம்.

**துலாம்:** மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். நிலுவை பணம் வசூலாகும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும்.


**விருச்சிகம்:** பகைமையுடன் பேசுபவரிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. தொழில் வளர்ச்சி பெற அக்கறையுடன் பணிபுரிவீர்கள். அளவான பண வரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்களின் நற்குணங்களை நண்பர் பாராட்டுவார். தொழிலில் வளர்ச்சி பணிகளை நிறைவேற்றுவீர்கள். பணபரிவர்த்தனைதிருப்திகரமாகும். .

**மகரம்:** உத்வேக மனமுடன் பணிபுரிவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வீட்டை அழகுபடுத்த கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** இன்று கவன குறைவால் நன்மை பெறுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரம் சீராக இயங்க குறைகளை சரி செய்வது நல்லது.

**மீனம்:** அவசியமற்ற வகையில் கிடைக்கின்ற உதவியை தவிர்ப்பது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். குடும்பத்திற்கான பணசெலவு கூடும்.



பன்னாட்டு குத்துச் சண்டைப் போட்டியில்

# ஹாட்லி மாணவன் ஷானுஜன் வெள்ளிப் பதக்கம் வென்றார்

யாழ்ப்பாணம்,நவ.26

பன்னாட்டு குத்துச் சண்டைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிமாணவன்விக்னேஸ்வரன் ஷானுஜன் தனது பன்னாட்டு ரீதியிலான முதலாவது பதக்கத்தைச் சுவீகரித்தார்.

இந்தப் போட்டி சுவீடனில் போராஸ் நகரில் கடந்த 21ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை இடம்பெற்றது. 81 கிலோ எடைப் பிரிவு குத்துச் சண்டைப் போட்டியில் ஷானுஜன் காலிறுதியாட்டத்தில் போர்த்துக்கல் வீரரை 5:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியிருந்தார். இறுதியாட்டத்தில் சுவீடன் வீரருடன் மோதி 3:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினர். மேற்படி போட்டியில் சுவீடன், இங்கிலாந்து, நோர்வே, பின்லாந்து, போர்த்துக்கல், ஸ்கொட்லாந்து, உகண்டா, கனடா, இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 500க்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொண்டனர். (23- 422)



# டைமன்ஸ் அணி கிண்ணம் வென்றது

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

இறுதியாட்டம் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்றது. இதில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் பிறேம்குமார் தெரிவானார். தொடராட்ட நாயகனாக பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வீரர் யூட் கெனடி தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் கோல்காப்பாளர் சுஜீவன் தெரிவு செய்யப்பட்டார். கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும், நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4.1 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## கால்பந்தாட்ட போட்டிக்கான அணித் தெரிவு இன்று

யாழ்ப்பாணம் நவ.26

அகில இலங்கை கால்பந்தாட்ட அக்கடமி 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கால்பந்தாட்ட போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ்ப்பாண கால்பந்தாட்ட அக்கடமி அணி கலந்து கொள்ளவுள்ளது. இதில் பங்குபற்றுவதற்கான அணித் தெரிவு இன்று செவ்வாய்க்கிழமைமாலை 4 மணிக்கு அரியாலை கால் பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் 2006,2007 ஆம் ஆண்டு பிறந்தவர்கள் அணித் தெரிவில் பங்குபற்ற முடியும் என தலைமைப் பயிற்றுனர் ம.டனிஸ்ரன் தெரிவித்துள்ளார். (23)



# மகுடம் சூடியது ஈகிள் அணி

யாழ்ப்பாணம், நவ.26

வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியோடு மருதநிலா விளையாட்டுக் கழகம் நடத்தும் மருதநிலா வெற்றிக் கிண்ணத்துக்கான அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்று விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஈகிள் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஈகிள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஈகிள் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக ஈகிள் விளையாட்டுக் கழக அணிவீரர் டிலக்சன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக ஈகிள் விளையாட்டுக் கழக அணி வீரர் ஜேசுதாசன் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக ஈகிள் விளையாட்டுக் கழக அணியின் கோல் காப்பாளர் சதீஸ் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பின்கள வீரராக ஈகிள் விளையாட்டுக்கழக அணி வீரர் சசி தெரிவானார். (23)

## மீண்டும் மக்ஸ்வெல்

மனஅழுத்தம் காரணமாக கிரிக்கெட்டில் இருந்து விலகி இருந்த மக்ஸ்வெல் மற்றும் பேடின்சன் மீண்டும் கிரிக்கெட்டுக்குத் திரும்பியுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணியின் முன்னணி சகலதுறை ஆட்டக்காரர் மக்ஸ்வெல் கடந்த மாதம் மனநிலை அழுத்தம் காரணமாக கிரிக்கெட்டில் இருந்த சிறிது காலம் ஒதுங்கி இருப்பதாக அறிவித்தார். அதேபோல் நிக் பேடின்சனும் இந்த மாதம் 9ஆம் திகதி அறிவித்திருந்தார். இந்த நிலையில் இருவரும் மீண்டும் கிரிக்கெட் போட்டிக்கு திரும்பியுள்ளனர். தற்போது விக்டோரியா பிரிமீயர் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மக்ஸ்வெல் பிட்ஸ்ராய் டான்காஸ்டர் அணிக்காக விளையாடினார். செயின்ட் கில்டா அணிக்காகவிளையாடிய பேடின்சன் 58 ஓட்டங்களை விளாசினார்.



### வோட்லிங் இரட்டைச் சதம், சட்னர் சதம் விளாச

# நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் வெற்றி



இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணி, நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ரி-20 போட்டிகள், டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் ரி-20 தொடரை இங்கிலாந்து அணி 3:2 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி கடந்த வியாழக்கிழமை ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, 353 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி, முதல் இன்னிங்ஸில் 9 இலக்குகளை இழந்து 615 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. நியூசிலாந்து அணி 262 ஓட்டங்களால் முன்னிலையில் காணப்பட்டது.

தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களை பெற்றது. ஜோ டென்லி 7 ஓட்டங்களுடனும், ரூட் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். களமிறங்கிய சிறிது நிமிடத்திலேயே 11 ஓட்டங்களுடன் வெளியேறினார் ரூட். டென்லி பெற்ற 35 ஓட்டமே அணியின் அதிகபட்ச ஓட்டங்களாகக் காணப்பட்டது. பின்வரிசையில் ஆர்ச்சர் அதிரடி காட்டினார். 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 30 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அணி 197 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது. இதனால் 65 ஓட்டங்கள் மற்றும் ஓர் இன்னிங்ஸால் தோல்வியைத் தழுவியது இங்கிலாந்து அணி.

பந்து வீச்சில் நீல் வோக்னர் 5 இலக்குகளையும், மிட்செல் சன்டனர் 3 இலக்குகளையும், டிம் சவுதி மற்றும் கிராண்ட்ஹோம் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச் சதம் விளாசிய நியூசிலாந்து வீரர் வோட்லிங் தெரிவானார்.

## பகலிரவு டெஸ்ட் இந்தியா முழுவதும் நடத்தப்படும்

### கங்குலி தெரிவிப்பு

கொல்கத்தாவை தொடர்ந்து இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பகல்இரவு டெஸ்ட் போட்டியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதல் இளம் சிவப்பு பந்து டெஸ்ட் போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இந்த பகல் இரவு டெஸ்ட் கொல்கத்தாவில் மட்டும் நடத்திக் கொண்டிருக்க முடியாது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கங்குலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்;

கொல்கத்தா டெஸ்ட் போட்டியை காண ரசிகர்கள் அதிக அளவில் வந்திருந்தனர்.

இந்த டெஸ்ட் போட்டியை பிரபலப்படுத்த நாங்கள் ஏராளமான பணிகளை செய்தோம். ரிக்கெட் முழுவதும் விற்று தீர்ந்து விட்டன. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பகல்இரவு டெஸ்ட் போட்டியை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## போல்டுக்கு காயம்

விலா எலும்பில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் டிரெண்ட் போல்ட் விளையாடுவது சந்தேகம் எனக் கூறப்படுகிறது.

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் மவுண்ட் மவுங்கானுயில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

நேற்றைய இறுதி நாள் ஆட்டத்தில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிரெண்ட் போல்ட் விலா எலும்பு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமான போட்டியின் இடைநடுவே வெளியேறினார்.

காயத்தின் தன்மையை துல்லியமாக கண்டறிய ஸ்கேன் பரிசோதனை செய்யப்படுகிறது. அதன் பின் காயம் குறித்த முழுத் தகவல் தெரிய வரும்.

இதனால் ஹாமில்டனில் இடம்பெறும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சந்தேகம்தான் எனக் கூறப்படுகிறது.

இவர் முதல் இன்னிங்ஸில் ஓர் இலக்கைக் கைப்பற்றியிருந்தார். 2ஆவது இன்னிங்சில் 6 பந்துப் பரிமாற்றங்களை மட்டுமே வீசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆஸி. அணியின் தெரிவுக்குழு உறுப்பினராக ஜார்ஜ் பெய்லி?

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் ஜார்ஜ் பெய்லி, தேர்வுக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படவுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தற்காலிக அணித் தலைவராக செயற்பட்டவர் ஜார்ஜ் பெய்லி. இவர் ஆஸ்திரேலிய அணிக்காக 5 டெஸ்ட், 90 ஒரு நாள் மற்றும் 30 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். கடந்த 2017 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர் ஆஸ்திரேலிய அணியில் இடம் பெறவில்லை.

பெய்லி தற்போது ஆஸ்திரேலியா அணியின் தெரிவுக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவர் பிக் பாஷ் ரி-20 லீக்கில் ஹோபார்ட் ஹரிகேன்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். அதேபோல் டாஸ்மானியா அணிக்காகவும் விளையாடி வருகிறார்.



# தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு விழாவில் மியூசிகா, அம்பிகைபாலன், றோஜிதவுக்கு தங்கம்

யாழ்ப்பாணம், நவ.26

கல்வி அமைச்சால் முதன் முறையாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு விழாவில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி நாகராசா மியூசிகா சம்பியனானார். நேற்று கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல், ஈட்டி எறிதல் போட்டிகளில் அவர் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.



றோஜித மியூசிகா அம்பிகைபாலன்

மற்றுமொரு போட்டியில் 14 வயது ஆண்கள் பிரிவில் அராலி இந்துக் கல்லூரி மாணவன் நேதபவுஜீ அம்பிகைபாலன் தங்கம் வென்றார். 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 50 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, 30 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, மற்றும் பந்து எறிதல் போட்டி ஆகியவற்றில் அவர் முதலாமிடத்தைப் பெற்று தங்கம் வென்றார்.


14 வயது பெண்கள் பிரிவில் கிளிநொச்சி புன்னை நீராவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி றோஜித தங்கம் வென்றார். 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான 50 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, 30 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, மற்றும் பந்து எறிதல் போட்டி ஆகியவற்றில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். (23)

# இந்திய அணி முதலிடத்தில்!

பன்னாட்டு டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது.

இந்திய அணி 360 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியா 116 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், நியூசிலாந்து அணி 60 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இலங்கை 60 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், இங்கிலாந்து அணி 56 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், தென்னாபிரிக்கா அணிகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இவை எவையும் புள்ளிக்கணக்கை ஆரம்பிக்கவேயில்லை. (ம)




# சவுதியின் முதல் பெண் கார் பந்தய ஓட்டுநராக ரீமா ஜுஃபாலி அறிமுகம்

சவுதி அரேபியாவின் முதல் பெண் கார் பந்தய ஓட்டுநராக ரீமா ஜுஃபாலி அறிமுகமாகியுள்ளார்.

சவுதி அரேபியாவில் பெண்களுக்கு ஏராளமான கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. முகம், உடல் தெரியாத அளவுக்கு ஆடைகள் அணிதல், கார் ஓட்டத் தடை, விளையாட்டுப் போட்டிகளை நேரடியாகப் பார்க்கத் தடை, சினிமா பார்க்கத் தடை உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் பெண்களுக்கு இருந்தன.

ஆனால், சவுதி அரேபியாவின் இளவரசர் மொஹமட் பின் சல்மான் ஆட்சிக்குப் பின் பல்வேறு புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இவர் சமீபத்தில் பெண்கள் கார் ஓட்டுவதற்கும், ஓட்டுநர் உரிமம் பெற்றுக்கொள்ளவும் அனுமதி அளித்தார். பெண்கள் திரையரங்குகளில் சென்று சினிமா பார்க்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த நிலையில் சவுதியில் பெண் கார் பந்தய ஓட்டுநராக வரலாற்றில் இடம் பெற்றுள்ளார் 27 வயதான ரீமா ஜுஃபாலி. இவர் சவுதியின் ஜெட்டா நகரில் வளர்ந்தவர். அமெரிக்காவில் கல்வி பயின்றவர்.

'ஜாகுவார் ஐ பேஸ்' கார் பந்தயத்தில் பங்கேற்றுள்ள ரீமாவுக்கு சவுதி இளவரசர்கள் உட்பட பல்வேறு தரப்புகளிலிருந்து வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.




விற்பனைக்கு உணவகம் ஒன்றிற்கு
தேவையான பொருட்கள் விற்பனைக்கு உண்டு. 077 516 5352

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.11.2019 வெற்றி வாரம் 2688 வர்ணம் மஞ்சள்
மீனம்
வெற்றி இலக்கங்கள் 04 21 38 56
செவ்வாய்க். கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 431, 510/=
26.11.2019 ம் திகதி செவ்வாய்க். கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 802
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.11.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,360,245/-
வெற்றி இலக்கங்கள் 14 17 33 66
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
தாமியின் குரல் சேவையின் தொடர்பு: 0114 825 826

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3266 திகதி: 2019.11.25
நீலம் திங்கட்கிழமை
சுப்பிரி தனஸ்
விசேட இலக்கம் 8355
வெற்றி இலக்கங்கள் 38 65 68 74
ஆங்கில எழுத்து A
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 71,705,310/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கோடிபதி கப்ருக
K 01 09 35 38
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,079,855/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
சீட்டிழுப்பு வாரம்: 524
திகதி: 2019 நவம்பர் 24
வர்ணம்: மஞ்சள் ஞாயிறு
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1080
சீட்டிழுப்பு திகதி 2019.11.24 ஞாயிற்றுக்கிழமை
M 11 22 57 61
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

THE TRUTH SHALL MAKE YOU FREE
AD 1824
UDUVIL

**UDUVIL GIRLS' COLLEGE**
**Reunion of the Past Pupils**

We have a chance to revisit the school and walk down the Memory lane

**Day & Date:** - Sunday, December 01, 2019.
**Venue:**- School Main Hall
**Time:**- 4.00 p.m.

The presence of all the past pupils is solicited.

**Principal,**
**Uduvil Girls' College**

(MN/CR/32838) (11.17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.